# வீறுகவியரசர் முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு (பல்வகை)

தொகுப்பாசிரியர்
பாரி முடியரசன்

## உள்ளுறை

பக்கம்

பதிப்புரை
முன்னுரை

பல்வகை
1. துயில்
2. ஏது வாழ்வு
3. மாதவி
4. உள்ளம்
5. வளரக்கெடும்
6. கம்பன் குரல்
7. கண்ணீர்
8. மாணவர் மன்றம்
9. வேண்டுவன
10. மணமகனுக்கு
11. குடும்பம் ஒரு காவியம்
12. இளமையில் நரை
13. எவர் சொற்கேட்பது
14. மன்னர் ஆட்சி
15. நிலையாய் இரு
16. ஏழையைக் கண்டிலேன்!
17. அன்பாய் இரு!
18. வள்ளலார் வழி
19. பாப்பா பாட்டு
20. அத்தர் விற்போன்
21. பல்கலைக் கழகம்
22. ஆடவர்

23. நட்பு
24. தெரு விளக்கு
25. இசை மயக்கம்
26. இசையால் வந்த மயக்கம்
27. சிலம்பட்டும் போர்முரசு
28. எது துணிவு
29. சிவப்பு விளக்கு
30. முன்னறிவிப்பு
31. இருண்ட வீடு
32. துன்புறவோ பெற்றாள்?
33. புதுவிதி செய்வோம்
34. அணையா விளக்கு
35. குயில் பாட்டு
36. செஞ்சொற் சிலம்பு
37. நினைந்து மகிழ்கின்றேன்
38. தலை நண்பன்
39. புகழ்ச்சியின் பயன்
40. அன்றும் இன்றும்
41. புகையும் மனத்தன்
42. உயிர்ப் பொம்மை
43. நெஞ்சிற் புகுந்த வேல்
44. முகக் கண்ணாடி
45. வாழ்க தமிழரசு
46. வாழிய தமிழரசு
47. உதவுவையே
48. நல்குன் அரு

**வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை**
**வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு**
**பாரி முடியரசன் பற்றி**

# பல்வகை

[வீறுகவியரசர் முடியரசனார் ‘பல்வகை’ பற்றிப்
பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. துயில்
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

**தொழிலாளி:**
காலையிலே துயிலெழுந்து நீரைப் பாய்ச்சிக்
களையெடுத்துக் கதிர்காத்துப் புவியைக் காத்தோம்,
ஆலையிலே நூல்நூற்றோம், அவற்றால் நல்ல
ஆடைகளை ஆக்கிஉயர் மானங் காத்தோம்,
மாலைவரை வீடுகட்டி மரமும் ஏறி
மடவாரை நகர்க்கனுப்பி உடல்அ லுக்க
வேலைசெய்தோம், உணவில்லை, உறங்கச் சென்றோம்!
வேதனையை மறந்திருக்கத் துயிலே! வாவா! 1

**முதலாளி:**
பெட்டகத்துப் பணம்நிறைத்துப் பூட்டி வைத்த
பெருஞ்சாவிக் கொத்தின்மேல் திண்டு வைத்துக்
கட்டில்மேல் விரித்திருக்கும் மெத்தை மீது
கண்ணயரச் சென்றேன்நான்; கடைக்க ணக்கும்,
வட்டிவயல் வரவிருப்பும் செல்வம் இன்னும்
வரும்வழியும், எண்ணுவதால் உறக்கம் இல்லை;
கட்டிவைத்த பொருள்கொண்டு வாங்கு தற்குக்
கடைச்சரக்கா அவ்வுறக்கம்? என்ன செய்வேன்! 2

**காதலன்:**
புத்தகங்கள் படித்துணர விரித்த போதும்
புதுக்கவிகள் எழுதிடநான் எண்ணும் போதும்
புத்தம்புதுப் படங்காணச் சென்ற போதும்
பொல்லாத துயிலே! நீ தொல்லை தந்தாய்!
கத்துகுரல் புள்ளொடுங்க வருவேன் என்றாள்
கடையாமம் வந்துமவள் வந்தாள் இல்லை;
இத்தனைபோழ் தாகியும்கண் மூட வில்லை
இரிந்தோடி மறைந்தாயோ காதல் முன்னே! 3

**காதலி:**
நாயொலியால் பெற்றோரும் விழித்து விட்டார்
நான்வருவேன் என்றவரும் காத்து நிற்பார்
தாயுள்ளம் காட்டாத தலையன் பைத்தான்
தந்திடுவார் என்றிருந்த எண்ணம் வீணாய்ப்
போயிற்றே! எனைத்துயிலே நீயும் வஞ்சம்
புரிகின்றாய்! நீவந்தால் கனவி லேனும்
போய்அவரைத் தழுவிடுவேன் அவரும் நானும்
புதுவுலகம் சென்றிடுவோம் நீவா ராயோ? 4

**ஆசிரியன்:**
கண்ணிதழ்கள் அறியாமல் குவியப் பெற்றுக்
கைப்பொருள்கள் நழுவிவிழக் குறித்த ஒன்றைப்
பண்ணுங்கால் மெய்சோரக் கையும் சோரப்
பாதியிலே அச்செயல்தான் சோர்ந்து நிற்க
எண்ணங்கள் ஓடாமல் நிலைத்து நிற்க
இருக்கின்ற கடன்துயரும் வறுமை நோயும்
மண்ணகத்தில் மறந்திருக்க அமைதி எங்கும்
மருவிடநின் றாடுகின்ற துயிலே! வாழ்க! 5

**மாணவன்:**
நாடகங்கள் நிழற்படங்கள் காணும் போதும்
நண்பருடன் அரட்டையடித் திருக்கும் போதும்
ஊடகத்தே வாராமல் உதவி செய்தாய்!
உவகையுற்றேன்; தேர்வென்னும் கூற்றுக் கஞ்சிப்
பாடங்கள் படிப்பதற்குத் தேநீர் மாந்திப்
பாடுபட்டுப் புத்தகத்தை விரித்து வைத்தால்
ஆடகத்தாள் பெயர்த்துநடம் செய்கின் றாயே!

ஐயையோ என்செய்வேன்! துயிலே! போபோ! 6

**திருடன்:**

எங்கள்குலம் காக்கின்ற துயில ணங்கே!
என்னகைம்மா றுனக்களிக்க வல்லோம் நாங்கள்?
வெங்கொடுமை செய்துபணம் சேர்த்து வைத்தோன்
வெளிமாடிக் கட்டிலிலே உறங்கு கின்றான்
பொங்கிருட்டில் உழைப்பாலே சோர்ந்து மற்றோர்
புரளாமல் கண்ணயர்ந்தார்; கன்னக் கோலைத்
தங்குதடை இல்லாமல் சாத்து கின்றோம்
தாயே! நீ இல்லைஎனில் ஏது வாழ்வு? 7

**துறவி:**

எனையாளும் இறைவா!உன் அடியைப் போற்ற
இளங்காலை நீராடிப் பூசை செய்வேன்
வினையாளர் பரிமாறச் சுவைசேர் உண்டி
விதவிதமா உண்பேன்பின் பழமும் பாலும்
நினையாத போதெல்லாம் முன்னே நிற்கும்
நிறைபணமும் வசதிகளும் நிறையப் பெற்றும்
மனையாளும் பெண்ணொருத்தி இல்லை என்ற
மனக்கவலை கௌவியதால் உறக்கம் இல்லை 8

## 2. ஏது வாழ்வு?

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

துன்புற்றுப் பசிப்பிணியாற் கிடைத்த சோற்றைத்
துடிதுடித்து விழுங்குகிறான் அந்தச் சோற்றி
ல்மென்புழுவோ பிறபொருளோ கிடப்ப தோரான்
மேதினியில் இயற்கைஎழில் காணு கில்லான்
கன்னெறியிற் கோலூன்றி நடக்கும் போழ்து
காலிடறி வீழ்கின்றான் பெற்ற கண்கள்
நன்னிலையில் இல்லாத தாலே இந்த
நானிலத்திற் பிச்சையலால் ஏது வாழ்வு? 1

காலொன்றும் கையொன்றும் அற்றான், மானம்
கந்தல்மிகு துணிகொண்டு காப்பான், மூங்கிற்
கோலொன்றின் துணைகொண்டு நகர்வான், பற்றுக்
கோடொன்றும் வாழ்வதற்கிங் கில்லான், அன்னான்
மேலொன்றும் பெருநோயின் கொடுமை தாங்கி
வெளியிடத்தே வாழ்கின்றான்; அந்த வாழ்வு
மேலென்று காக்கஉயிர் விழைந்தால் வாழ
விழைந்தவற்குப் பிச்சையலால் ஏது வாழ்வு? 2

உறுதுணையா வேறெவரும் இல்லான், உண்ண
ஒருவழியும் அறியாதான், எழுத்தும் எண்ணும்
பெறுவகையும் காணாதான், கோவில் வாயில்
பெரியவர்கள் சிதறவிடும் தெங்கின் காயை
மறுசிறுவர் பொறுக்குதற்கு மனமில் லாமல்
மல்லுக்கு நிற்பான்,அவ் வாயில் ஒன்றே
உறுமனையா வாழ்சிறுவன் பிச்சை யின்றி
உயிர்வாழ எண்ணினவற் கேது வாழ்வு? 3

## 3. மாதவி

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

ஆரிய மாக்கள் அவர்நிலம் விட்டுச்
சீரிய உயர்தனிச் செம்மொழி வழங்கும்
தமிழகம் புகுந்து தறுகண் அருள்நிறை
தமிழர்க் கெல்லாம் தகுநிறை கற்பினைச்
சொற்றனர் எனச்சில கற்றோர் செப்பினர்;
நற்றகு மரபினர் கற்பறி யாரோ?
நன்றோ இதுவென நானயர்ந் திருந்தேன்;
துன்றிய அரசினைத் துறந்திடு தூயோன்
இளங்கோ என்முன் தோன்றி ''மனத்தைத்
துளங்க விட்டாய் துயருனக் கேனோ''
என்றனர்; என்துயர் இதுவெனச் சொன்னேன்;
''மதியிலி கேட்பாய்! மாதவி வாழ்வு
புதுவ தன்றே புகல்வதை யறியாய்!
ஆட்டம் பயின்றாள், அரசனும் விரும்பும்
கோட்டமில் குணத்தாள், கோவலன் றன்மேல்
நாட்டங் கொண்டாள், நல்லற மென்னும்
இல்லறம் பூண்டாள்; எழில்மணி மேகலைப்
பேறும் பெற்றாள்இப் பெரிய வாழ்வு
மாறுமோர் நாளென மனத்திலும் நினையாள்
ஆயினும் அந்தோ அரசன் பிழையால்
ஆயினும் பிணமென அறைந்தனர் அறிந்தோர்;
தீதிலாக் கோவலன் தீர்ந்தனன் என்ற
தீமொழி கேட்டுத் திகைத்தனள், பதைத்தனள்;
போம்வழி யாதெனப் புலம்பினள், அன்புடைக்
கொழுநன் மாண்டான் குவலய வாழ்வு
தழுவுதல் வேண்டாள், தன்பொருள் யாவும்
அறத்திற் காக்கி அறவணர்ச் சார்ந்து
புறச்செல வொழிந்து புகுந்தனள் பள்ளி,
இன்பந் துறந்தாள், இசைநடந் துறந்தாள்,
என்பும் அன்பால் இளகிடப் பெற்றாள்,
அதனுடன் அமையா தருள்மணி மேகலை
பித்துல கறுத்துப் பெருநிலை பெறவே
துறவு பூணத் தூய்மை யாக்கினள்,
மறமனத் தாயின் மாற்றம் வெறுத்தாள்
இனையள் அன்னை என்னுயிர் மாதவி
அனையள் பிறந்த அருமை நாட்டில்
மானமே மதிக்கும் மாந்தர் வாழ்ந்தனர்
இங்கோ வந்தவர் இசைத்தனர் கற்பை?
ஆரிய இலக்கியம் அரிவையர் பண்பைச்
சீரிய முறையில் செப்பிய துண்டோ?
இழிவாம் இழிவாம்'' என்றவர் மறைந்தார்
நன்றவர் மொழியே வாழிய கற்பே.

## 4. உள்ளம்

**நூல்:—முடியரசன் கவிதைகள்**

எண்சீர் விருத்தம்

இல்லாத பொல்லாத செயல்கள் கூறி
    இதற்கென்றே வாழ்கின்ற உள்ளம் உண்டு;
நல்லவரைக் கெடுத்தொழிக்கும், அன்பைத் தீயக்கும்,
    நாயகற்கும் மனைவிக்கும் பகையை ஆக்கும்,
கொல்லவரும் பாம்பென்னக் கொடுமை செய்யும்,
    குடும்பத்தில் உடன்பிறப்பில் பிளவுண் டாக்கும்,
சொல்லரிய போர்மூட்டும், தீமை செய்யத்
    துணிவுதரும்; அவ்வுள்ளம் கூனல் உள்ளம் 1

முடிச்சுள்ளம் எனும்பேரே இதற்குச் சாலும்;
    முதலில்ஒரு நண்பரிடம் குறைகள் சொல்லும்,
அடுத்தகணம் ஓடோடி மற்றோர் தம்மை
    அடுத்திருந்து முதலவரைத் தாழ்த்திக் கூறும்,

படித்தவரைப் பழித்துரைக்கும், கட்சி பேசிப்
பாழ்படுத்த முனைந்துநிற்கும், இந்த ஒன்றே
தடித்திருக்கும் கூனுள்ளம் வாழும் மட்டும்
தரணியிலோர் அமைதியிலை பகையே மூளும். 2

அமைச்சர்உறுப் பினர்முதலாம் பதவிக் காக
அலைபவரைக் காண்கின்றோம், நகரின் ஆட்சி
அமைக்கின்ற உறுப்பினராய் வெற்றி பெற்றால்
அருச்சனைகள் எத்தனையோ செய்வர்; ஆட்சி
சுமக்கின்ற பொறுப்பிருந்தால் போதும் என்று
சூழ்ச்சிகளை வகைவகையா இழைப்பர் அந்தோ!
இமைப்பொழுதும் சுகம்காணா ஆசை யுள்ளம்
இளிவந்த செயல்நாணாப் பதவி உள்ளம் 3

வீட்டுரிமை சொத்துரிமை பிரிக்கும் போழ்து
வியனாக ஒன்றிருந்தால் பொறுத்தி ருக்க
மாட்டார்கள் உடன்பிறப்பென் றெண்ணார் ஓடி
வழக்குரைக்கும் அறமன்றம் ஏறி அங்குக்
காட்டிடுவர் தம்திறமை, எஞ்சி யுள்ள
கைப்பொருளை மன்றாடி காலில் வைத்துப்
போட்டழுவர் பயனொன்றும் காணு கில்லார்
பொறாமையுளம் இவருள்ளம் பொக்கை யுள்ளம் 4

## 5. வளரக் கெடும்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

குறுநடை நடந்து கூடி ஒன்றாய்க்
கோழியின் குஞ்சுகள் குலவி யிருந்தன;
எச்சில் இலைகள் இன்னும் பற்பல
மிச்சில் எல்லாம் மிதந்து கிடக்கும்
குப்பைக் கோட்டில் கூர்உகிர் விரலால்
கிளறிக் கிளறிக் கிடைத்ததைக் கோழி
குஞ்சுகட் களிக்கக் கொக்கரித் ததுவே;
பறந்து வந்தன பச்சிளங் குஞ்சுகள்,
மொய்த்திடும் அவற்றுள் முந்தித் திறக்கும்
மென்சிறு வாயுள் வன்பெரு மூக்கால்
கொஞ்சிக் கொஞ்சிக் கொடுத்தது கண்டேன்;
அடடா அடடா! அன்னையின் அன்புக்
கேதடா உலகில் ஈடும் எடுப்பும்?
அஃறிணைப் பிறப்பும் அன்னையின் அன்பால்
பின்னிக் கிடக்கும் பெருநிலை உணர்ந்தேன்;
அவைகள் யாவும் அஞ்சிட ஓர்குரல்
வானிற் கேட்டது; வட்ட மிட்ட
பருந்து வந்து பாய்ந்தது; கோழி
தன்முழு வலியால் தாக்கி விரட்டும்
தகவு கண்டு தாய்மைப் பண்பை
மேலும் வியந்தேன், சின்னாள் சென்றன
குஞ்சுகள் பெரிய கோழிகள் ஆயின;
குப்பையை அன்னைக் கோழி கிளற
இரைபெறும் நோக்கால் இளைய கோழிகள்
ஓடி வந்தன; உடனே இரைதனைக்
கொடுக்க மறுத்துக் கொத்தி விரட்டிய(து)
ஒற்றுமை காணேன், உயர்ந்த அன்பைக்
காணேன், பகைமை கண்டேன் அந்தப்
பேதைக் கோழியின் பிழையினைக் கண்டதும்
உலகில் நடக்கும் ஒன்றனை யுணர்ந்தேன்;
ஈயும் எறும்பும் இருந்திடப் பொறாஅள்
தன்மகன் நோயுறின் தான்மருந் துண்பாள்,
அன்பின் உச்சியில் அமர்ந்திருப் பாள்தாய்

பெரியோன் ஆன பின்னர்த் திருமணம்
நடத்தி மகிழ்வாள் நாள்கள் சென்றால்
அன்பை மறப்பாள் அருமை மகனென
எண்ணவும் செய்யாள் எழுப்புவள் பகையை
பூனையும் எலியும் போல நடப்பாள்
என்னே உலகம்! என்னே தாய்மை!
தாயும் கோழியும் தம்முள் ஒன்றென
வாழ்தல் நன்றோ? வாழின் இழிவே.

## 6. கம்பன் குரல்

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

வெண்கலிப்பா

கனவோடு துயில்கவ்வக் கண்மூடி நானிருந்தேன்
புனலோடி வளஞ்சேர்க்கும் பொன்னித் திருநாட்டில்

வருவிருந்து பார்த்திருக்கும் வாழ்வுடையார் சேர்ந்துறையும்
திருவழுந்தூர் எனப்புகலும் சிற்றூர் தனையடைந்தேன்

கம்பன் இருக்குமிடம் காட்டிடுவீர்! எனவினவ
அம்பொன் மணிமாடம் ஆய்கின்ற கலைக்கூடம்

மிகவுடைய, பொருள் அள்ளி மேலோர்க்குத் தருகின்ற
தகவுடைய, வள்ளன்மைத் தனவணிகர் நாடேகின்

காணலாம் எனப்புகன்றார் கண்டவர்கள்; வந்ததிங்கே
வீணதுவோ எனக்கலங்கி விரைந்தேன் மிகவிரைந்தேன்

நாட்டரசன் கோட்டை நகரடைந்தேன் கம்பன்
கூட்டை மறைத்திருக்கும் கோவிலினை நான்கண்டேன்

வணங்கிமுகம் மேல்நிமிர்த்தேன் வானக் குடுமிதொடும்
மணங்கமழும் வெண்புகையின் மண்டலத்துள் ஒருருவம்

வந்துநின்று 'நின்விருப்பம் வாய்விட்டுக் கூ'றெனலும்
நொந்திருக்கும் என்மனத்துள் நுழைந்தது காண் பெருமகிழ்வு

ஐயாநீ வளர்கதையை அறிவிக்க வேண்டு மென்றேன்;
''பையாநான் வளர்கதையைப் பாவலர்கள் திரித்துவிட்ட

சரடு மிகவுண்டே என்னைஏன் சார்ந்துநின்றாய்?''
கரடு முரடாகக் கட்டிவிட்டார் கவிவாணர்

உண்மைஎது பொய்மைஎது உணர்வதற்கோர் வழியில்லை
கண்மயங்கி நிற்கின்றேன் கதைகூறி அருளென்றேன்

''முப்பொருளைச் செப்புகிற முதுமைப் பெருநூலாம்
முப்பாலை நன்கருந்தி, முச்சங்கக் கனிபிழிந்த

சாறருந்தி, காப்பியமாச் சான்றோர் சமைத்துவைத்த
சோறருந்தி, நோய்நொடியின் சோர்வகற்ற மாமுனிவர்

தேடிவைத்த இலக்கணமாம் சிறந்த மருந்துண்டு
ஓடி விளையாடி உயரணிகள் பலபூண்டு

நான்வளர்ந்தேன்; இப்புவியோர் நாலுபேர் கூடிநின்று
தேன்வளர்ந்த தமிழ்மொழியைத் தெரியாத ஏழையிவன்

என்றுரைத்தார், என்நாவில் எழுதிவிட்டாள் காளிஎன்று
கொன்றுவிட்டார் என்னறிவைக் கூறுகிறே னின்னுங்கேள்

பொன்றா வளஞ்சுரந்து பொன்னி புனலூட்டிக்

கன்றாவின் அருளேபோல் காத்தருள நான்வளர்ந்தேன்

எனைக்காத்த தாய்நாட்டை எழில்கொழிக்கும் புனலாற்றை
நினைக்காத நாளெல்லாம் நீரருந்தா நாளாகும்

போற்றற் குரிய**பொன்னிக்(கு)** அடிமை என்றேன்
மாற்றலர்கள் கூடிநின்று மாற்றிவிட்டார் என்கதையை

காசுக்குக் கூடும் கணிகைஎனும் பொன்னிக்குப்
பேசும் அடிமைஎன மாசுபடப் பேசிவிட்டார்!

பாராளும் வேந்தர் பலபேர் எனைவளர்த்தார்
ஊராளும் குறுமன்னர் ஊட்டி வளர்த்தோரும்

ஏராளம், இருந்தாலும் இவ்வுலகைக் காப்பதற்கே
ஏர்ஆளும் வேளாளர் என்னை வளர்த்தவிதம்

ஓர்நாளும் நான்மறவேன் உப்பிட்ட என்தோழன்
காராளும் கையுடையான் காத்தான் **சடையப்பன்**

அன்பைக் குழைத்தெடுத்(து) ஆர அருத்திஉயிர்
என்பும் எனக்காக்கி இருந்தான் அவன்துணையால்

வறுமைத் துயரறியேன் வாட்டம் சிறிதுமிலேன்
அருமைக் கலையுணர்வும் ஆன்று மிகக்களித்தேன்

களிப்புணர்வு பொங்கிஎழக் காவியம் ஒன்றுகண்டேன்
அளிக்கருணை காட்டியதால் அந்நன்றி மறக்காமல்

உள்ளம் மிகவிரும்பி ஒவ்வோர் இடங்களிலே
வள்ளல் சடையப்பன் வளர்பெயரைப் பொறித்திருந்தேன்

பொறித்திருந்த காவியத்தைப் பூவுலகோர் ஏற்பதற்கு
நெறித்துறையில் அலைமோதும் நீளரங்கத் தலத்துறையும்

முக்கோட்டு நாமத்தார் முன்வைத்தேன் அரங்கேற்றும்
சொற்கேட்டு மதவெறியால் குழ்ச்சிபல செய்தார்கள்

இன்றென்றார் நாளைஎன்றார் இடுப்பொடிய வைத்தார்கள்
என்றென்றும் அவரிழைத்த இடுக்கண் மறப்பதில்லை

அவ்வளவில் விட்டாரா? ஆய்ந்துரைத்த என்கவியைச்
செவ்விய நன்முறையில் சேர்ந்துபலர் கற்றார்கள்

நன்மைக்கோ தீமைக்கோ நம்பும் படியாகப்
புன்மைக் கவிபலவும் புகுத்திவிட்டார் பெருத்துவிட்டேன்

அழுக்காறு கொண்டனரோ ஆசைமிகக் கொண்டனரோ?
இழுக்கான பலபாடல் இடைச்செருகி விட்டார்கள்

ஏடெழுதும் தேட்டாளர் எழுத்தாணி தவறியதால்
பாடங்கள் மிகப்பலவாய்ப் பல்கினவே படிப்பவர்கள்

உறும்பாடு கணக்கில்லை உரைஎழுதும் பேரறிஞர்
கரும்பான தமிழ்விடுத்துக் கற்றவித்தை காட்டிவிட்டார்

என்பேரால் திருநாளென் றேறியவர் மேடைமிசை
என்பேரை ஒதுக்கிவன வான்மீகி ஏற்றத்தை

விளம்பினார் அவன்பேரை விளம்பரங்கள் செய்தார்கள்
களம்புகுதற் கென்பேரைக் காட்டுகிறார் அவ்வளவே

நயவஞ்சர் சூழ்நிலையில் நான்வளர வழியில்லை
பயனொன்றும் காணாமல் பதைபதைத்து நானிருந்தேன்

இந்நிலையில் என்நண்பர் எழுந்தார் உலகிற்கு
நன்னிலையில் என்கவியை நயமாக எடுத்துரைத்தார்

புயல்வண்ணத் தழகனையே புகழ்உயிராக் கொண்டுநின்ற
தயரதன்போல் என்கவியே தம்முயிராக் கொண்டிருந்தார்

நாடெல்லாம் என்பேரே நவின்றுவந்தார் அதன்பிறகே
கேடின்றி நான்வளர்ந்தேன் கே''ளென்ற தவ்வுருவம்

உன்புகழைப் பரப்பியஅவ் வுத்தமர்தாம் யாரென்றேன்
''தென்பொதியக் குற்றால **டி.கே.சி** நீயறிவாய்

இன்னுமோர் இளைஞருளார் எனைவளர்க்கும் கடம்பூண்டார்
பண்ணும் புகழ்காரைப் பதியுடையார் மதியுடையார்

சொல்லேந்திச் சீதையுடன் சுரம்சென்ற முன்னவனை
வில்லேந்தி நின்று விழித்திமையாக் காத்ததுபோல்

விழிப்போடு காத்து வளர்க்கின்ற வீரரவர்
பழிப்பில்லாத் தொண்டுசெயும் பண்பார் **கணேசன்**எனும்

நண்பரவர்; அங்கேயே நாடறிந்த மற்றொருவர்
நண்பருண்டு சுமந்திரன்போல் நல்லமைச்சர் எனைவளர்க்கும்

கருத்துடையார் நான்சொன்ன கவியுணர்வார் என்னுளத்தின்
கருத்தறிவார் உரைஎழுதிக் காக்கின்றார் அன்னவர்தாம்

**முருகப்பர்** அருகிருப்பர் முத்தமிழின் சுவைசொல்லி
உருகவைப்பர் இத்தகைய உத்தமரால் வளர்கின்றேன்

இன்னுமோர் உயிர்நண்பர் இங்குண்டு யாரென்று
சொன்னவுடன் திகைக்காதே உண்மையினைச் சொல்கின்றேன்

**கண்மூடி வழக்கத்தைக் கடும்புயலே போலெதிர்த்து**
**கண்மூடச் செய்ய மணங்கொண்டார் திடங்கொண்டார்**

**கற்றறிந்த சொல்வல்லார் காஞ்சி புரத்துறைவார்**
**நற்செயல்கள் பலசெய்வார் நாடறியும் அவர்என்றன்**

**உயிர்த்தோழர்'' என்றந்த உருவம் புகன்றதும்நான்**
**அயிர்த்தேன்பின் அண்ணா துரையா எனக்கேட்டேன்;**

''ஆமாம் அவரேதான்; அவர்வளர்த்த கதைசொல்வேன்;
ராமா எனச்சொல்வர் ராமன்பேர் தானறிவர்

காவிய நலனறியார் கவிதையின் சுவையறியார்
மேவிய கதையைஎங்கும் மேலாகப் பேசிடுவர்

கதைகாலட்  சேபம்என்று காணும் இடமெல்லாம்
கதைகதைப்பர் பக்திஎன்பர் கம்பன்யார் எனஅறியார்

எனை மறந்தார் எனைமறைத்தார் இராமனையே வளர்த்தார்கள்
நினைவிழந்தார் இவ்வண்ணம் நின்னாட்டு மக்களெல்லாம்;

அறியாமை இருளகற்ற ஆர்த்தெழுந்த **ஈவேராப்**
**பெரியார்** எனைப்பற்றிப் பேசிவந்தார் அவர்படையில்

அப்போது தான்எழுந்தார் **அண்ணா துரை**நண்பர்
தப்பாக நடந்துவந்த தமிழகத்தார் விழித்துணர்ந்தார்

இப்போது தான்மக்கள் என்னை வளர்க்கின்றார்
தப்பேதும் உண்டோ**?** தமிழ்க்கவியின் சுவையென்றும்

கம்பன் கவிஎன்றும் காவியத்தின் பெருமைஎன்றும்
இம்பர் நலம்பயக்கும் எழில்ஓ வியம்என்றும்

பேசுகின்றார் பாடுகின்றார் பிறநாடர் போற்றும்வணம்
தேசமெங்கும் என்புகழே செப்புகின்றார் பூரித்து

வளர்கின்றேன் ஈதென் வளர்கதையாம் போய்வருவேன்;
தளர்கின்ற நிலையின்றித் தாய்மொழியைப் பேணிடுக

தீமை படியவிட்டால் தீயில்தான் வீழ்ந்திடுவேன்
ஊமைஎன நீங்கள் உம்மென் றிருக்காதீர்!

கன்னித் தமிழ்வாழக் காவியச் சுவைவாழ
உன்னிப்போ டிருந்திடுக ஊறுசெய்வார் பலருண்டே''

என்றுரைத்துப் புகையோ டேகிவிட்ட தவ்வுருவம்
நின்றிருந்த நான்வணங்கி நிமிர்கையிலே கைநழுவிப்

பொத்தென்று வீழ்ந்து புரண்டதுகைப் புத்தகந்தான்
மெத்தென்ற படுக்கைமிசை விதிர்ப்புற்றுக் கண்விழித்தேன்

கம்பன் புகன்றகதை கவிபாட உதவுமென்று
நம்பிக் கவிபுனைந்தேன் நான்

---

**பாடற் குறிப்பு:–** தஞ்சை கம்பன் திருநாள் கவியரங்கில் பாடப்பெற்ற பாடல்.

## 7 கண்ணீர்

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

**காதல் உலகில்**

கவலற்க தைத்திங்கள் வருவேன் என்று
 காதலிபால் இனிதுரைத்துத் தேற்றிச் சென்றான்
அவளதற்கு மனமொப்பி ஆற்றி நின்றாள்;
 அறுவடைகள் புரிந்துவளம் பொங்கும் தையை
உவகைத்தேன் பெருக்கெடுக்கத் தையல் கண்டாள்;
 உளங்கவர்ந்து பிரிந்தவன்றன் வரவு நோக்கிக்
குவளைக்கண், நனிசிவந்து துயிலும் இன்றிக்
 குளமாயிற் றவன்வாரா திருந்த தாலே 1

இடியிடித்து மின்வெட்டிக் குளிர்ந டுக்க
 இருகையால் உடல்பொத்தி ஒடுங்கும் வண்ணம்
கொடிபிடித்து மழைபெய்யப் பிரிந்த காதற்
 கொழுநன்இனும் வந்திலனே என்று சோர்ந்து
துடிபிடித்த இடையுடையாள் துவளும் போது
 துணைவனங்குத் தோன்றியதும் புதையல் கண்ட
மிடிபிடித்தோன் உள்ளம்போல் துள்ளித் தாவும்
 மிளிர்விழியில் மெருகிட்டுத் ததும்பும் கண்ணீர் 2

**குழந்தை உலகில்**

அன்னையிடம் தின்பண்டம் கேட்டுப் பிள்ளை
 அடுத்தடுத்து நச்சரிக்க, அச்சம் காட்டி,
உன்னையிதோ கட்டுகிறேன் என்று கையை
 ஓங்கிஒரு கயிறெடுக்க மிகச்சி வந்து
கன்னமதில் முத்துதிர்க்கும் அழகுக் கண்கள்;
 கஞ்சிக்கும் வகையின்றித் தெருவில் கற்றிச்
சின்னவர்கை யேந்துகையில் இல்லை என்று
 சினந்துரைக்க நீர்சிந்தும் பசித்த கண்கள் 3

**குடும்பத்தில்**

நோய்வந்து மிகவருத்த உடல்மெ லிந்து

நொந்துழலும் சிறுமகவு துயரம் கண்ட
தாய்வருந்தி மனமுடைந்து பெற்ற நெஞ்சு
தாளாமல் சிந்துகிறாள் கண்ணீர், அந்தச்
சேய்நிலையும் தாய்நிலையும் காணும் தந்தை
செயலற்று வழியற்று வறுமை அம்பு
பாய்ந்திருக்கும் மனப்புண்ணின் செந்நீர் போலப்
பாவமவன் விழிசிந்தும் கண்ணீர் வெள்ளம் 4

'திருமணமேன் செயத்துணிந்தேன்? பின்பு பிள்ளைச்
செல்வங்கள் பெற்றெடுக்கும் பிழையேன் செய்தேன்
வறுமையுறும் மாந்தருக்கு வாழ்வும் உண்டோ?
வளர்செல்வம் பெற்றவர்க்கே வாழ்வாம்' என்று
பொறுமிமனம் வெம்பிஉல கோர்செய் கேலி
பொறுக்கஉளம் ஆற்றாமல் விம்மு கின்றான்
குறுமனமும் இழிசெயலும் நிறைந்த பாரில்
கொட்டுகின்றான் கண்ணீரை அந்தோ! அந்தோ! 5

**விதவை உலகில்**

வெண்மதியில் தண்மையுண்டு; வீசும் தென்றல்
விளைவிக்கும் நல்லின்பம்; அவளி டத்தும்
பெண்மையுண்டு, பருவஎழில் நிறைய உண்டு,
பேசுமொழி கிள்ளைஎன்பர், இருந்தும் அன்னாள்
பெண்மைநலம் காணுகிலாள், விதவை என்று
பெயர்வைத்துக் கொல்லுகின்றார், உலகை காணக்
கண்ணிருந்தும் குருடாகிக் கண்ணீர் சிந்திக்
கயிறில்லாப் பம்பரம்போல் பாழாய் நின்றாள் 6

**தொழில் உலகில்**

வித்திட்டுப் பயிர்செய்து விளைச்சல் கண்டான்,
விதவிதமா ளிகைபலவும் ஆக்கித் தந்தான்,
முத்துக்குக் கடல்மூழ்கிப் பிழைத்து வந்து
முதலாளி உலகுக்கே ஒளியைத் தந்தான்,
[1]புத்துக்குள் கைநீட்டும் செயல்போல் மண்ணுள்
பொன்னுக்கு நுழைகின்றான், அவர்கள் எல்லாம்
மத்திட்ட தயிர்போல நெஞ்சு டைந்து
வாழ்வின்றிக் கண்ணீரைச் சிந்து கின்றார் 7

**பொது வாழ்வில்**

இவ்வண்ணம் மக்கள்படும் துயரம் நோக்கி
இவைநீக்கி நலங்கண்டு வாழ்வ தற்குச்
செய்வண்ணம் யாதென்று சிந்தித் தாய்ந்து
செயல்செய்ய அல்லலுற்று, 'மக்கள் இன்னும்
உய்வண்ணம் உணர்ந்திலரே' என்று கண்ணீர்
உகுக்கின்றார் நல்லறிஞர்; இன்னும் சில்லோர்
கைவண்ணம் பலகாட்டித் தாமே வாழக்
காசினியில் வடிக்கின்றார் முதலைக் கண்ணீர் 8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. புத்து–புற்று (வழக்குச் சொல்)

## 8. மாணவர் மன்றம்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

நாட்டிற் பற்பல நலிவுகள் கண்டோர்
ஓட்டிட வேண்டி உயர்பணி செய்தனர்;
தாய்மொழி நாட்டம் தவிர்ந்தனர் தமிழரென்
றாய்முறை பலகண் டரசியற் போரிடச்
சான்றோர் பலராய்ச் சார்ந்தனர்; சிந்தனை
தோன்றுதல் இலராய்ச் சொல்வதே கேட்டு
மாய்ந்தனர் மக்களென் றாய்ந்தனர் மேலோர்,

சாய்ந்திடும் தமிழகம் தழைத்திட விரும்பி
அல்லும் பகலும் அலைந்து திரிந்து
சொல்லினர் சொல்லினர் சொற்பொழி வாற்றினர்
பெரும்பயன் கண்டிலோம்; பெய்மழை இருந்தும்
அரும்பு தளிருடன் அரும்பும் காயும்
கருகிடல் ஏனெனக் கருதினர் ஒருவர்
துருவினர்; உண்மை தோன்றிய பயனால்
வேரில் தீமை விளைத்திடும் புழுக்கள்
பாரித் திருக்கப் பார்த்தனர்; அவற்றை
நீக்கிடின் நாட்டில் நிலைபெறு நன்மை
ஆக்கிடும், அறிவு வளர்ந்திடும், எனக்கொண்
டன்றே தொடங்கினர் ஆர்வந் துணையா
நன்றே செய்தனர். நாடும் திருந்தும்
மாணவர் திருந்தின் மாநிலம் தெளியும்
காணலாம் நலமெனக் கருதிய பெரியார்
மனத்தகக் தெழுந்தது **மாணவர் மன்றம்;**
நினைத்தவர் யாரெனின் நிகழ்த்துவன் கேண்மின்!
உழைப்பின் உருவம், உள்ளம் விரிகடல்,
களைப்பும் சலிப்பும் காணாச் செம்மல்
நடுநிலை பிறழா நல்லவர், நாட்டில்
கெடுநிலை காணிற் கிளர்ந்தெழு வீரர்,
மனிதருள் முத்து, **மயிலை முத்து**
எனும்பெயர்க் [1]கிழவர், எமக்கும் கிழவர்
நிறுவிய மன்றம் நெடுநாள் வாழிய!
பெறுமுயர் தாயெனப் பேணுக இதனை!
தொடர்புறும் மாணவர் தூயவ ராகி
அடலே றென்ன ஆண்மைமீக் கூர்ந்து
மொழியும் நாடும் முந்துறக் கண்டு
வாழ்க வாழ்கென வாழ்த்துதும் யாமே.

---

**பாடற் குறிப்பு:–** சென்னை மாணவர் மன்றத்தை வாழ்த்திப் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. கிழவர் – முதியவர், உரியவர்.

## 9. வேண்டுவன

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

குணத்தாலும் உடலாலும்
அழகு மிக்க
குமரிளனை மணந்தின்பம்
கொடுக்க வேண்டும்;

கணக்கோடு மகப்பேறு
நிகழ வேண்டும்;
கள்ளமிலா நண்பருடன்
தொடர்பு வேண்டும்;

மணத்தோடு தென்றல்வந்
துலவு கின்ற
மாடியுள்ள வீடொன்று
வேண்டும்; வாழ்வு

பணத்தாலே இடரின்றி
நடத்தல் வேண்டும்;
பகையில்லா அருளுள்ளம்
இருத்தல் வேண்டும். 1

---

**பாடற் குறிப்பு:–** பாடிய பாடல்கள் பல. ஆயினும் ஒன்றுதான் கிடைத்தது.

## 10. மணமகனுக்கு

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

நிலைமண்டில ஆசிரியப்பா

மணமகள் நயந்திட மற்றுளோர் மகிழ்ந்திடப்
புதுமணக் கோலம் பூண்டிடும் நினக்குப்
புகல்வதொன் றுளது புந்தியிற் கொள்க!
தேன்மலர் இதழில் தென்றல் வருடத்
தோன்றுமோர் நறுமணம்; துளிர்அரும் பாயினும்
அழிவுறு மலரே ஆயினும் அவற்றுள்
நறுமணம் தோன்றாது நாடுநன் குணரும்;
மக்கள் மணமும் அத்தகு சிறப்பே,
மணம்பெறு பருவம் வந்துள பெண்பால்
பூவின் தன்மை பொலிவதால் அவளைப்
பூப்படைந் தனளெனப் புகன்றிடும் உலகம்;
மலரும் தென்றலும் மணந்திடத் தரகர்
எவரும் இல்லை; இதுவே தமிழர்
மணமுறை யாகும்; மற்றைய எல்லாம்
தமிழ்மணம் அல்ல வந்தவர் தந்தன;
இதனை உணர்ந்துநீ இனிய தமிழால்
மணம்பெறும் அன்ப! வாழ்க! வாழ்க!
பெண்மைக் குயர்வு பேணுக! உடல்நலம்
காத்துக் குழந்தைகள் கணக்கொடு பெறுக!
இன்பங் காணுக! துன்பம் நேரின்
துணிவுடன் அதனைத் துணையுடன் எதிர்க்க!
அன்பைப் பாய்ச்சி இன்முகங் காட்டி
வாழ்முறை தெரிந்து வாழ்க! ஒருவர்
குற்றம் புரியின் மற்றவர் பொறுக்க!
இதுவே வாழ்க்கை இதுவே மணமாம்
உலகில் ஒருவர் மற்றவர்க் குறுதுணை
ஆமெனும் உண்மை அறியச் செய்வது
திருமண மேயிதைத் தெரிந்து வாழ்க!
சமத்துவம் நும்பால் தழைத்திடச் செய்தே
எடுத்துக் காட்டென இலங்குக இனிதே!

## 11. குடும்பம் ஒரு காவியம்

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

அன்பினுக்கோர் எல்லைஎனும் அன்னை, தந்தை
  அறவுரைகள் எடுத்துரைக்கும் ஏடாம்; இல்லாள்,
இன்பமெனும் சுவையுணர்த்தும் ஏடாம்; உள்ளம்
  ஈர்க்கின்ற மழலைமொழிப் பிள்ளை, நெஞ்சத்
துன்பறுக்கும் இசைச்சுரங்கம்; உடன்பி றந்த
  துணைவர்களோ, தோள்வலிமை காட்டும் ஏடாம்;
வன்புரைக்கும் நாத்தியவள், அவலம் என்னும்
  சுவையினையே வடிகட்டி உணர்த்தும் ஏடாம். 1

ஆதலினால் குடும்பமது சுவையால் நெஞ்சை
  அள்ளுமொரு காவியமென் றறைதல் சாலும்;
மோதலிலாக் குடும்பத்தில் பகைக்கு ணத்தை
  மூட்டிவிடும் ஊராரோ காவி யத்தைத்
தீதுறவே அரித்தொழிக்கும் அந்துப் பூச்சி
  செல்கரையான் இவைபோல்வர்; அவர்கள் பேச்சைக்
காதுமடுத் திடவேண்டா ஒதுக்கி விட்டுக்
  காவியத்தைக் காத்திடுக வாழ்வீர் நன்றே 2

## 12. இளமையில் நரை
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

நிலைமண்டில ஆசிரியப்பா

யாண்டுசில வாக நரைபல வாகுதல்
யாங்ஙனம் உற்றீர் என்பீ ராயின்
பெற்றஎன் தாயோ பேசியும் ஏசியும்
ஒருமகன் என்னை உறுதுயர்க் காக்கி
மருமகள் என்னும் மாபெரும் பகையால்
மனைக்கினி யாளைஎன் மனக்கினி யாளைக்
குணத்துயர் வாளைக் கொடுந்துயர்ப் படுத்தி
இல்லின் உயர்வும் என்புகழ் உயர்வும்
கருதில ளாகிக் கடும்போர் தொடுத்தனள்;
ஆளும் அரசோ அயலவர்க் காகி
நாளும் தமிழ்க்கு நலிவே தந்து
நெஞ்சிற் கவலை விஞ்சிடச் செய்தது;
தமிழராப் பிறந்தும் தாய்மொழி தமிழென
நினையார் அதனைத் தாழ்த்த நினைத்து
வயிறு வளர்ப்போர் வதிவதிந் நாடே;
நச்செனும் பொறாமை நயமிலாப் புறஞ்சொல்
இச்சகம் பேசல் இளிவரல் புரிதல்
மிக்கிடக் கண்டு மெலிந்ததென் உளனே;
ஒரிரு நண்பர் உயிரெனப் பழகினும்
பலகால் என்னைப் பகைத்துப் பேசிச்
சிலகால் பழகும் சீரியோர் பலரே

## 13. எவர்சொற் கேட்பது?
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

கடவுளரைப் பாடென்றான் ஒருவன்; மாந்தர்
கண்ணீரைச் சிந்துகிறார் அதனைப் பாராய்
மடமைக்குப் பாடியவை போதும் போதும்
மனிதனைநீ பாடிடுக என்றான் மற்றோன்;
கடலிடையே எழும்பரிதி சிவந்து காட்டிக்
கவிதைக்கு நான்பொருளாய் அமைவேன் என்றான்
;படரிருளை ஓட்டுகின்ற மதியோ காதற்
பாட்டுக்கு நானின்றேல் யாரே என்றாள் 1

பசும்புல்லின் நுனிப்பனிநான் உன்வி ழிக்குப்
படவிலையோ? எனநகைக்க, உருத்து மேகம்
விசும்பிருக்கும் எனைவிடுத்துப் பாடு தற்கு
வேறுளதோ என்றதட்டச், செய்கை தோறும்
குசும்பிருக்கும் பிள்ளைமொழி பாடி விட்டால்
குறைந்தாபோம்? எனமனைவி புலந்து சொல்ல,
உசும்புகின்ற உணர்வொடுங்கிப் பாட்டில் நெஞ்சம்
ஓடாமற் செயலின்றிக் கவிஞன் நின்றான் 2

கார்வரவும் நான்வருவேன் என்றார் இன்னும்
காணவில்லை மழையேபோ என்றொ ருத்தி
போர்புரிவாள்; காதலர்என் னருகில் உள்ளார்
பொழிகமழை பொழிகஎன இன்பம் பொங்க
மார்பகங்கள் பூரிப்பாள் மற்றொரு ருத்தி;
மழைபெய்யின் நல்விளைச்சல் காண்பேன் என்பான்
ஏர்புரிவோன்; மற்றொருவன் இன்று பெய்தால்
எள்முதிர்ந்து நிற்பதெலாம் பாழே என்பான் 3

தண்முகிலே நீபொழிந்தாற் சோறே யில்லை
தயைசெய்வாய் என்றுழைப்பால் உண்போன் சொல்வான்;
கண்மறையப் போர்வைக்குள் சுகமே காண்போன்
களித்திருப்பான்; இரப்பாளன் வசவு சொல்வான்;
விண்மழைக்கு வரவுரைத்து மயில்கள் ஆடும்;
வேறொருபாற் குயில்வருந்தி வாய டங்கும்;
பண்ணிசைக்கும் கவிஞனுடன் காள மேகம்
பாரிலெவர் உரைகேட்டு நடத்தல் ஆகும்? 4

---

**பாடற் குறிப்பு:–** பலரும் வந்து, 'அதைப்பாடு இதைப்பாடு' என்று தொல்லை தந்த போது பாடிய பாடல்.

## 14. மன்னர் ஆட்சி
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

மன்னாட்சி என்னுஞ்சொற் கேட்டாற் போதும்
மனங்குழம்பி வாய்பிதற்றி வெறுத்துச் சொல்வோர்
என்னாட்டில் இருக்கின்றார் அவர்க்குச் சொல்வேன்;
எங்கெங்கோ கொடுங்கோலர் ஆட்சி செய்தார்
அந்நாட்டார் வெறுத்துரைத்தல் இயல்பே யாகும்;
ஆருயிராச் செங்கோன்மை புரிந்து வந்த
இந்நாட்டில் தமிழகத்தில் மன்னர் ஆட்சி
இகழ்ந்துரைப்போர்க் கெஞ்சுவது பழியே யாகும் 1

குடிபுரக்கும் படியிருக்கும் மன்னர் ஆட்சி
கொடுங்கோன்மை கண்டறியா நிலையி ருக்கும்;
மடிசுரக்கும் ஆவினைப்போல் மக்கள் வாழ்வில்
வளஞ்சுரக்க அருள்சுரக்கும் அவர்தம் நெஞ்சம்;
முடியிருக்கும் வாளிருக்கும் வெற்றி கூறும்
முரசிருக்கும்; குடியாட்சிப் பண்பே அங்குக்
குடியிருக்கும்; இவ்வுண்மை அறிய கில்லார்
குறைகூறின் அவர்மதியில் பழுதி ருக்கும் 2

மொழிவளர்த்தார் கலைவளர்த்தார் அறம்வ ளர்த்தார்
முறைபிறழும் நிலைவருமேல் அறிஞர் நல்ல
மொழியுரைக்கச் செவிகொடுத்தார்; கற்பின் செல்வி
மூண்டெழுந்த சீற்றத்தால் கடிந்து ரைத்துப்
பழியுரைத்தாள் உயிர்கொடுத்தான் பாண்டி மன்னன்;
பார்த்ததுண்டோ குடியரசில் இதுபோல் மேன்மை?
இழிவுரைக்க முயலாதீர்! உயர்ந்த தென்றே
இயம்பிடுக சங்கத்து மன்னர் ஆட்சி 3

## 15. நிலையாய் இரு
**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

கொள்கையில் நிலையாயிரு மனிதா – கொண்ட
கொள்கையில் நிலையாயிரு மனிதா – எந்தக்
கொடுமைகள் வந்தாலும் கலையாதிரு மனிதா
–கொள்கை

தொடுப்பு

கொள்ளைநிதி பலவாக உனைநாடிக் குவிந்தாலும்
கொடுவறுமை மிகவாகித் துயராலே அவிந்தாலும்
–கொள்கை

முடிப்பு

சரியா இது தவறா என அறிவால்மிக நினைவாய்
தகுமேஇது எனஓர்நெறி விழைவாய் அதில் புகுவாய்
உரமேபெறு பயமேதொலை இறவாதவர் இலையே
ஒருசாண்வயி றுணவேபெற நிலைமாறுதல் புலையே
—கொள்கை

## 16. ஏழையைக் கண்டிலேன்!

(நூல்:—காவியப் பாவை)

கல்லைக் கனிய வைத்தான் — அங்கே
கற்பனை தேக்கி வைத்தான்
சொல்லத் துடிதுடித்தே — கவிதை
துள்ளிக் குதித்ததடா! 1

உண்ணவும் நேர மிலான் — சற்றே
ஓய்வும் ஒழிவு மிலான்
எண்ண மெலாங் குவிய — நெஞ்சில்
ஏக்கம் நிறைந்ததடா! 2

ஐந்து விர லிடையே — சிற்றுளி
ஆடித் திரிந்ததடா!
அந்த நடந் தனிலே — அவன்விழி
ஆழ்ந்து பதிந்ததடா! 3

எண்ணமும் சிற்றுளியும் — பெற்ற
ஏந்திழைப் பெண்ணொருத்தி
வண்ண முகங் காட்டிச் — சிற்ப
வாழ்வினைக் கொண்டுநின்றாள் 4

மங்கையைப் போற் றிடவே — பளிங்கு
மாளிகை கட்டி வைத்தார்
எங்கும் அவள் புகழே — கண்டேன்
எத்தனை விந்தையடா! 5

மங்கைக்கு வாழ்வளித்த — சிற்பி
மாய்ந்து மறைந்துவிட்டான்
எங்கெங்குத் தேடினுமே — அந்த
ஏழையைக் கண்டிலனே! 6

## 17. அன்பாய் இரு!

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

எத்தனை தரம் சொல்வேன் — மனமே
எல்லாரிடமும் அன்பாய்இரு என்று
—எத்தனை

தொடுப்பு

பித்தனைப் போல் கல்லாத பேயனைப்போல் — நீ
பேசித் திரியாதே நேசித்திருப்பாயென்று
—எத்தனை

முடிப்பு

வஞ்சனைகள் செய்யாதே வாழ்வினில் பொய்யாதே
வாயில்வந்த படியெல்லாம் வாதுகள் செய்யாதே
நஞ்சனைய தீமொழிகள் நவிலாதே பிறர்பொருளை
நாடாதே நடுநிலைமை கோடாதே என்றுநான்

—எத்தனை

## 18. வள்ளலார் வழி
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

வள்ளல் வழி நடப்பாய் – மனமே!
வாழும் முறை வகுத்த ராமலிங்க
—வள்ளல்

தொடுப்பு

உள்ளொன்றும் புறமொன்றும் உரையாடி விளையாடும்
உலகோரை நாடாதே! பகல்வேடம் போடாதே!
—வள்ளல்

முடிப்பு

சாதியினால் மதப் போதையினால் மறைச்
சாத்திரத்தால் மன ஆத்திரத்தால் இந்த
மேதினிமேல் பகை கொள்ளாதே இதைத்
தள்ளாதே எனநமக் கறிவுரை தந்திடும்
—வள்ளல்

பேராசைப் படவேண்டாம் பிறர்பொருளைத் தொடவேண்டாம்
பெருநெறியை விடவேண்டாம் பொய்யுரையால் கெடவேண்டாம்
மாறாத மனவுறுதி சோராதே நோய்தன்னால்
மாயாதே மதியிழந்து தேயாதே எனவுரைத்த
—வள்ளல்

## 19. பாப்பா பாட்டு
(நூல்:—காவியப் பாவை)

அறிவை வளர்த்திடு பாப்பா – நாட்டை
ஆளப் பிறந்தவள் நீயன்றோ பாப்பா
அறிவைக் குறைத்திடும் தாள்கள் – வாங்கி
ஆதரித் தாலிங்குத் தீமையே பாப்பா 1

அன்புடன் ஒற்றுமை வேண்டும் – சாதி
அகம்பாவத் தீமையை அகற்றிடல் வேண்டும்
உண்மை நெறிதனைப் போற்று – நெஞ்ச
உறுதி குறைந்திடாத் தன்மையை ஏற்று 2

முயற்சியில் நம்பிக்கை வேண்டும் – கெட்ட
மூடத் தனங்களைப் போக்கிடல் வேண்டும்
அயர்ச்சியே இல்லாது பாப்பா சொந்த
அருமைத் தமிழ்மொழி பயின்றிடு பாப்பா 3

ஒழுக்கமே உயர்வுக்கோர் ஏணி – அதைநீ
உணர்ந்து நடந்திட்டால் நாட்டுக்கோர் ஆணி
அழுக்கின்றி உடல்உள்ளம் கொண்டால் – துன்பம்
அணுகவே அணுகாது நின்னையே கண்டால் 4

## 20. அத்தர் விற்போன்
(நூல்:—காவியப்பாவை)

எடுப்பு

அத்தர் விற்று வருவோனின் தொல்லை – அப்பப்பா
அவன்கையில்அகப்பட்டார் தப்பிடுவதில்லை –அத்தர்

முடிப்பு

பூசுவது நம்முடலில் ஒன்று – சின்ன
போத்தலில் அடைத்துக் கொடுப்பது மற்றொன்று
காசுவரும் படிஒன்றே நோக்கம் – குழைந்து
கனியமிகப் பேசிடுவான் கண்டபலன் ஏக்கம்
–அத்தர்

தடவுவான் மற்றொன்றெ டுத்தே – என்ன
தடுத்தாலும் தாளிற்சு ருட்டிக் கொடுத்தே
தடவுவான் நம்தலையைப் பார்த்து – வேறு
தப்பவழி இல்லையென நாமிருப்போம் வேர்த்து
–அத்தர்

ஆரீவர் இப்பொருளைப் போலே – பூசும்
ஆடைமணக் கும்அடடா ஐந்தாறு நாளே
பாரீசுச் சரக்கொன்றி ருக்கு – நல்ல
பம்பாய்ச் சரக்கிங்கி லாந்துச்ச ரக்கு
–அத்தர்

என்றுபல தேயத்தைச் சொல்வான் – நம்மை
எப்படியும் வாய்திறக்க ஒட்டாமல் வெல்வான்
ஒன்றேனும் உண்மையோ என்று – பார்த்தால்
உள்ளூர்ச் சரக்கென்று தெரியுமே நன்று
–அத்தர்

## 21. பல்கலைக் கழகம்
**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

பல்கலைக் கழகம் பார் – அண்ணாமலைப்
பல்கலைக் கழகம் பார்
–பல்கலை

தொடுப்பு

கல்வியில் பெரியோர் கலைபல பயின்றோர்
கருத்துடன் வளர்த்திட விருப்புடன் உழைத்திடும்
–பல்கலை

முடிப்பு

இசையொடு வீணையும் இசைத்திடும் ஒருபால்
இலக்கிய ஆய்வுகள் நடத்திடும் ஒருபால்
வசையிலாச் சொல்லமர் முழங்கிடும் ஒருபால்
வாரிவாரிக் கல்வி வழங்கிடும் ஒருபால்
–பல்கலை

சிலைக்கோவில் மேவுமொரு தில்லைப் பதியருகில்
திருவேட் களவனத்தைச் சீராக்கி ஊராக்கிக்
சிலைக்கோயில் தமிழ்மொழிக்கே காணுமொரு வேட்கையினால்
கருணைமிகு வணிகர்குல மன்னனவன் எழுப்பியருள்
–பல்கலை

## 22. ஆடவர்
**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

காதலிக்கும் ஆடவனை இரவுப் போதில்
    காண்பதற்கு மறைந்திருந்து வரவு பார்க்கும்
காதலியைப் போலமுழு நிலவுப் பெண்ணாள்
    கருமேகத் திரைமறைந்து முகத்தைக் காட்ட,
ஏதமிலாத் தமிழொலிபோல் தென்றல் மெல்ல
    என்னுடலை வருட, உயர்மாடந் தன்னில்
[1]போதனைய பஞ்சணையில் சாய்ந்து பாடல்
    புனைந்திடநான் ஆடவரை நினைந்தி ருந்தேன் 1

கலக்கமிலா உயர்நட்பு, பிறனில் வேண்டாக்
    கண்ணியம், ஓர் உடன்வயிற்றுப் பிறந்தோர் தம்முள்
விலக்கமிலா துறுதுணையாய் நிற்றல், ஆள்வோர்
    வினைபிழைத்தால் இடித்துரைத்தல், பகைவர் [2]நாப்பண்
செலக்கருதின் அஞ்சாமல் பேசும் வன்மை,
    செஞ்சோற்றுக் கடன்கழித்தல் முதலாம் ஆண்மை
இலக்கணத்தைக் கடவாதார் இருக்கும் நாடே
    எழில்நாடாம்; கடப்பவர்கள் இருப்பின் காடாம் 2

**கனவில் கம்பன்**
எனுமெண்ணம் அலையலையாய் நெஞ்சில் ஓட,
    இரண்டொன்று பாடல்களை என்வாய் பாடத்
தனிநின்று வானரங்கில் திங்கள் என்பாள்
    தானாடக் கண்ணிமையில் உறக்கம் ஆட,
மனம்நின்று செயல்நின்று கண்ண யர்ந்தேன்
    மறைந்துவிட்ட கம்பனங்கு வந்து நின்றான்
கனவென்று நானறியேன் வணக்கம் என்றேன்
    ‘‘கருதியது யா’’ தென்று [3]முறுவல் பூத்தான் 3

ஆடவரைப் பாடென்றார் வழியைக் காணேன்
    அரிவையரைப் பாடென்றால் நூறு நூறு
பாடல்வரும்; என்செய்வேன்**?** என்றேன்; ‘‘தம்பீ
    பாடுதற்கு வழிசொல்வேன் என்னு டன்வா
தேடிவரும் பாடல்கள்தாம்’’ என்றான் கம்பன்;
    தித்திக்கும் சொல்கேட்டேன் உடன்பா டென்றேன்;
மாடிவிடுத் தகல்வானில் பறந்து சென்றோம்
    ‘‘வளம்சேரும் அயோத்திநகர் இதுகாண்’’ என்றான் 4

கலிவெண்பா

**தயரதன்**
‘‘திசையெல்லாம் தேரோட்டித் [4]தெம்முனையில் வேந்தர்
இசையெல்லாம் மேலோட்டி ஈடின்றித் தானாண்டான்
பட்டத் தரசியரும் பாவையரும் எத்துணையோ
கட்டிக் களித்தான் கணக்கில்லை மற்றவையும்
சீருண்டு செல்வம் மிகவுண்டு பல்வளஞ்சேர்
பாருண்டு மேலும் பலவுண்டாம் ஆனாலும்
ஓடி விளையாட, உண்ணும் பொழுதிருந்(து)
ஆடிக் கலத்துணவுள் அங்கை துழவுதற்கு,
வேய்ங்குழலைத் தோற்கடிக்கும் வெள்ளை மழலைமொழி
ஈங்களிக்க மக்களில்லை என்றேங்கி நின்றான்; பின்
வில்வீரர் சொல்வீரர் வேண்டும் செயல்முடிக்கும்
நல்வீரர் மக்களென நால்வரையும் பெற்றெடுத்தான்
வீரச் செயல்புரியும் வேல்தாங்கும் காளையரின்
தீரப் பணிகண்டு செம்மாந்து வாழ்ந்திருக்கும்
[5]‘‘வெண்தாடி வேந்தனைப்பார்’’ என்றவுடன் யாரென்றேன்
‘‘வின்தோய் நகராளும் வேந்தன் தயரதனாம்’’
என்றான் அதன்பின் எழில்சேர் மிதிலைநகர்
சென்றேன் அவனோடு சேர்ந்து 5

எண்சீர் விருத்தம்

**சனகன்**
வில்வைத்தான் வளைப்பவற்கே சீதை என்றான்;
    வீரர்பலர் பெண்ணனலும் ஓடி வந்தார்;

[6]மல்வைத்த திருநெடுந்தோள் வளைய நெஞ்சும்;
வளைந்ததன்றி வில்வளைய வில்லை அந்தோ!
கல்வைத்த தெனஇதயம் கலங்கி நின்று
காசினியில் பெண்பெற்றால் துயரே என்ற
சொல்வைத்த முகத்தானைச் சனகன் என்று
சொல்வானைச் சோர்வானை அங்குக் கண்டோம் 6

கட்டளைக் கலித்துறை

**இராமன்**
வேள்வியை ஆக்கிடத் தம்பியும் பின்வர வீரமுடன்
ஆள்வினை முற்றிய ஆடவன் சென்றான் மிதிலைவழி;
தோள்வலி வில்லோன் துணைவழி கவ்விய மாதரசி
வாள்விழி கண்டனன் வாடினன் சென்றான் வழிநடந்தே 7

காதல் மடவார் கடைக்கண் விழியினைக் காட்டிவிட்டால்
சாதலும் ஏற்பர் எளிதில் மலையும் தகர்ப்பரென்றே
ஓதலும் உண்மை உயர்பெரு வில்லும் சனகனுள
வேதனை யும்மொடித் தானொரு வீரன் மிதிலையிலே 8

நேரிசை ஆசிரியப்பா

**பரசுராமன்**
திருமண மாகித் திரும்புங் காலை
நெறியில் ஒருவன் நின்று மறித்தனன்
பொறிபடு விழியன் பூணூல் மார்பன்
தவவடி வுடையன் தருக்கும் கொண்டோன்
[7]பவவினை அறுக்கப் பரமனை நாளும்
நினைவோன் கையில் நீண்ட வில்லினன்
அனையோன் மணவினை ஆர்ந்த [8]குமரனை
அணுகினன் இடியென ஆர்த்தனன் ''இளையோய்!
ஓட்டை வில்லை ஒடித்தனை! என்கை
காட்டும் வில்லை வளைத்திடு காண்போம்''
கேட்டோர் நடுங்க நீட்டினன் வில்லை;
அன்பும் பணிவும் அரும்பிய நகையுடன்
முன்புற நின்றவன் [9]மூரிவில் வாங்கி
வளைத்தனன் அதனை; வளைந்த(து) ஆணவம்
களைத்தனன் துறவி கடுமொழி துறந்தான்
சினமும் தொலைந்தது சிறியவன் முன்னே
மனவலி குன்றி மரமென நின்றான்;
அருளும் தவமும் ஆண்டவன் வரமும்
பொருளும் புகழும் பிறவும் பெறினும்
செருக்கும் தருக்கும் சேரின்
[10]ஒறுக்கும் ஒறுக்கும் உண்மை அறமே. 9

கலித்துறை

**குகனும் பரதனும்**
ஓடு புனற்கிடை ஓடம் விடுத்திடும் ஆழ்கங்கை
வேடர் களுக்கிடை வீரம் நிறைந்திடும் [11]வில்லாளன்
நாடு கொடுத்திடும் நாயகன் என்றிவர் தோழமையால்
மூட மதிப்படு சாதி தொலைத்தனர் முன்னின்றார் 10

கண்டு மகிழ்ந்தனம்; காவி யுடுத்தோர் [12]இளைஞன்போர்
கொண்டு நெருங்கினன் என்ன விரைந்தனன்; [13]கோளரிபோல்
மண்டி எழுந்தனன் ''மாய்த்திடு வேனவன் மார்பினையே
[14]விண்டுயிர் போக்குவென்'' என்று முழங்கினன் வேடுவர்கோன் 11

.நெஞ்சு பொருந்திடும் நேய மிகுந்தவன் அவ்விளையோன்
சஞ்சலம் ஒருரு வாகிய தோஎனச் சார்ந்திடலும்
[15]செஞ்சர வேடுவன் சிந்தை கலங்கினன் செய்தியுணர்ந்(து)
[16]''அஞ்சன வண்ணர்கள் ஆயிரர் நின்னிகர் ஆவாரோ?'' 12

என்றனன்; ''அண்ணலும் யாண்டுளன்'' என்றான் வருமிளையோன்;
குன்றன தோளன் கொடியிடையாளுடன் வாழுமிடம்
சென்றனன்; மூத்தோன் சிறியவ னைக்கண் டருள்பொழியச்
''சென்றுநம் நாட்டினில் நாட்டிடு செங்கோல்'' எனமொழிந்தான் 13

*''மண்ணாள் அரசொரு மங்கையின் சொல்லால் முறைகொன்றான்;
அண்ணா! அருளுடன் ஆண்டிட வேண்டும்; அறமொன்றே
கண்ணா நினைந்திடும் கண்ணிய னேநின் அரசுரிமை
நண்ணேன் அரசியல் நாயக'' என்றனன் அவ்விளையோன் 14

அறுசீர் விருத்தம்

கண்டனன் [17]புளிஞர் வேந்தன்
கண்களில் நீர்சொ ரிந்தான்;
''மண்தனில் அரசுக் காக
மாள்கிறார் உடன்பி றந்தார்;
கண்டிடின் இவரை என்றும்
[18]காழ்ப்பகை தோன்றா'' தென்று
[19]விண்டனன்; பின்னர் நாங்கள்
விண்ணினில் பறந்து சென்றோம் 15

எண்சீர் விருத்தம்

**வாலி**
மலைமுகட்டில் முகில்தவழும் உயர்கிட் கிந்தை
மாநகரில் இறங்கியதும் மனமு டைந்தேன்;
கொலைமுகத்த கூரம்பு நெஞ்சந் தன்னில்
குருதியினைப் பாயவிட எண்ண மெல்லாம்
நிலைமுகத்தால் பேசுகின்றான் வாயுஞ் சோர்ந்தான்
நெடுமலைபோல் புரள்கின்றான் வஞ்ச நெஞ்ச
வலைமுகத்துள் சிக்குண்டான் போலும் என்று
வருந்திஅவன் யாரென்றேன் 'வாலி' யென்றான் 16

ஏனிந்த நிலையென்றேன்; ''உடன்பி றந்தார்
இருவர்க்குள் நேர்ந்தபகை'' எனப்பு கன்றான்;
வானிகந்த வலியானை எய்தோன் யாவன்?
எனவினவ ''ஆண்டுளன்பார்'' என்று சுட்டக்
கானிருந்த மரத்தடியில் வில்லைத் தாங்கி
மறைந்திருந்த கரியவனைக் கண்ணாற் கண்டேன்;
நானிலத்தில் வீரனென்போன் மறைந்தம் பெய்தல்
நல்லதுவோ? வீரத்திற் கிழுக்காம் என்றேன் 17

முறுவலித்தான் அப்புலவன்; விடையே யில்லை;
முணுமுணுத்தான் ''உடன்பிறப்புள் பிளவி ருந்தால்
வருபவர்க்கு நல்விருந்தாம் நமது நாடு;
வம்பெதற்கு? வாவா'' வென் றெனைய ழைத்தான்;
[20]கருவரைகள் பலகடந்தோம் கடல்க டந்தோம்
கண்கவரும் எழில்மாட இலங்கை என்னும்
பெருநகருள் புகுந்தோம்அங் கரண்ம னைக்குள்
பேசுகின்ற இடிமுழக்கம் கேட்டி ருந்தோம் 18

**கும்பகருணனும் இராவணனும்**
''பிறன்பொருளை [21]வேட்டெழுதல் குற்றம் ஒன்றோ
பெருமைக்கும் நம்குடிக்கும் பேரி ழுக்காம்
அறன்அன்றாம் மறம்அன்றாம்'' என்று ரைத்தான்;
''அடகும்ப கருணாஎன் உடன்பி றந்தும்
திறனின்னும் அறிந்திலையே! சீசீ போபோ
[22]தெவ்வருடன் நீயும்போ! இன்றேல் ஓடி
உறங்கிடுபோ!'' எனக்கனன்று சிரித்தான் வேந்தன்
உளம்நடுங்கி உடல்நடுங்கி வியர்வி யர்த்தேன்; 19

''அஞ்சேன்;உன் பகைவர்தமை நண்ணேன்; நீதான்
பிழைசெய்தாய்; அண்ணனென இடித்து ரைத்தேன்;
செஞ்சோற்றுக் கடன் கழிப்பேன்; சேரார் தம்மைச்
சேர்ந்துளவு சொலமாட்டேன் வேந்தே! இன்றே
வெஞ்சேனை கொண்டெழுவேன் யானோர் வீரன்
வீணனலேன்'' என்றெழுந்தான்; என்றன் தோள்கள்
நெஞ்சேறி நிமிர்ந்தனவே! வீரங் கொண்டான்
நெறிதவறான் நன்றியுளான் வாழ்க வென்றேன்; 20

நிலைமண்டில ஆசிரியப்பா

**கனவு கலைந்தது**

“பார்த்தனை தம்பி பற்பல ஆடவர்
சேர்த்திடு நெஞ்சில் செந்நெறி ஒன்றே
எவ்வழி ஆடவர் நல்லவர் உளரோ
அவ்வழி நிலனும் நன்றென அவ்வை
ஓதிய துணர்க! உயர்நிலை பெறுக!
மேதினி ஓங்குக” என்றனன் மேலோன்;
எவ்வழி ஆடவர் எவ்வழி ஆடவர்
எனநான் புலம்பிட என்மனை யாட்டி
அவ்வுரை கேட்டே ஆடவர் வீரம்
கனவில் தானோ காட்டுவ தென்றாள்;
கண்விழித் தெழுந்தேன் கம்பனைக் காணேன்

**பெண்டிர் எழுந்து பேசமுன் வந்தால்
ஆடவர் பேசா தடங்குதல் உண்மை
அதனால் யானும் அமைதலும் நன்றே. 21

---

**பாடற் குறிப்பு:—**

18—3—1954 அன்று காரைக்குடிக் கம்பன் திருநாள் கவியரங்கில், “கம்பன் கண்டபடி—ஆடவர்” என்ற தலைப்பில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:—**

1. போது அனைய — மலர் போன்ற மெல்லிய. 2.நாப்பண் — நடுவில். 3. முறுவல் — புன்சிரிப்பு. 4. தெம்முனை — பகைக்களம். 5.வெண்தாடி — தயரதன் முதுமையைக் குறிக்கும். மற்றொரு பெரியாரையும் சுட்டுவது உணர்க. 6. மல் — மற்போர். 7. பவவினை — பிறவிக்குக் காரணமாகிய வினை. 8. குமரன் — இராமன். 9. மூரிவில் — வலிய வில்.
10. ஒறுக்கும் — தண்டிக்கும். 11. வில்லாளன் — குகன். 12.இளைஞன் — பரதன். 13. கோளரி — சிங்கம். 14. விண்டு — பிளந்து. 15. சரம் — அம்பு. 16. அஞ்சன வண்ணர் — இராமர்.
*இப்பாடல் பரதன், இராமனை நோக்கிக் கூறுவதாயினும் அக்காலச் சூழலில் மற்றொரு பொருளையும் சுட்டுவது காண்க.
17. புளிஞர் — வேடர். 18. காழ்ப்பகை — முற்றிய பகை.
19. விண்டனன் — (கம்பன்) சொன்னான். .20. கருவரை—கரியமலை. 21. வேட்டு — விரும்பி. 22. தெவ்வர்— பகைவர்.
**பெண்டிர் எழுந்து பேசமுன் வந்தால் என்றது, அடுத்துப் பெண்டிர் என்னும் தலைப்பில் பாட வந்தவரைக் குறிக்கும்.

## 23. நட்பு

**(நூல்:—கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

அகத்துக்கண் மாசிலராய், இன்னாச் சொற்கள்
அழுக்காறு வெகுளிஅவா நான்கும் நீக்கித்,
தொகுக்கின்ற செல்வத்தால் ஈத்து வந்து,
தொண்டொன்றே பேணிவரும் தலைவ ரேறே!
மிகப்பழைய தமிழ்காக்க அறப்போர் ஆற்றும்
வேங்கைஎனும் கவிமணிகாள்! அரங்கம் காணத்
தொகுப்பாக இவண்வந்தீர்! [1]தமிழ வேளே!
தொழுதெனது கவிதைகளைப் பாடு கின்றேன் 1

**வேண்டும் நட்பு**

வளர்பிறையின் இயல்பினதாய், புலமை சான்றோன்
வகுத்துரைத்த நூல்நயம்போல் இனிமைத் தாகித்
தளர்நிலையில் உடுக்கைஇழந் தவன்கை போலத்
தானேவந் துதவுவதாய், அகம்ம லர்ந்து
வளருவதாய், மிகுதிக்கண் இடித்து ரைத்து
வாழ்வுதரும் பண்பினதாய், நற்கு ணத்தின்
விளைநிலமாய்ப் பழிநாணு கின்ற நட்பே
விழைகஎன வள்ளுவப்பே ராசான் சொன்னான் 2

**வேண்டா நட்பு**

சூதுமிகு நெஞ்சினராய்ச் சிரித்துப் பேசிச்
சொல்வேறு வினைவேறு பட்டார் நட்பும்,
பாதகங்கள் செய்யார்போல் தொழுது நின்று
படையொடுங்கும் கையுடைய ஒன்னார் நட்பும்,
தீதறியா நன்மனத்தால் அமையார் நட்பும்,
திறம்படுநூல் பலகற்றும் உளளம் மாணாப்
[2]பேதுடையார் நட்புமிவை தீமை எல்லாம்

பெருக்கிவிடும் கொள்ளற்க என்றும் சொன்னான் 3

**உணர்ச்சி நட்பு**

காடெல்லாம் கழனியென வளங்கொ ழிக்கக்
காவிரித்தாய் அருள்சுரக்கும் சோழ நாட்டுப்
[3]பீடுயர்கோப் பெருஞ்சோழன், பாண்டி நாட்டுப்
பெரும்புலமைப் பிசிராந்தைப் பெயரோன், என்போர்
[4]பாடரிய ஒருவர்புகழ் ஒருவர் கேட்டுப்
பழகலலால் சேர்ந்திருந்து பழகல் இல்லார்
ஊடெழுந்த உயர்நட்பின் திறத்தை நம்மால்
உணர்ந்துரைக்க எளிதாமோ உலகீர் இன்றே**?** 4

[5]வடக்கிருந்தான் அச்சோழன் என்று ணர்ந்து
வழியருமை கருதிலராய் விரைந்து வந்து
படக்கிடந்தார் அப்புலவர் என்ற செய்தி
பாரறியும்; அழிவின்கண் அல்லல் உற்றுக்
கிடப்பதுவே நட்பென்றும், உணர்ச்சி நட்பாங்
கிழமைதரும், புணர்ச்சியது வேண்டா என்றும்
எடுத்துரைத்த இலக்கணத்துக் கிலக்காய் உள்ளோர்
இவ்வரிய இருநண்பர் அன்றோ சொல்வீர் 5

**செயற்கரிய நட்பு**

'ஆன்றவிந்த பலசான்றோர் வாழும் ஊரேன்
ஆதலினால் மகிழ்ந்திருந்தேன் நரையொ ழிந்தேன்
நான், புலவீர்**!**' என்றுபிசி ராந்தைப் பேரார்
நவிலுவரேல், உடலுரமும் மகிழ்வும் நட்புத்
தான்றருமென் றுணர்கின்றோம், தக்கார் கூடி
நகலினினி தாயிற்பின் காண்போம் அந்த
வான்றொடுக்கும் பதிஎன்றார் சான்றோர்; வாழ்வில்
செயற்கரிய யாவுளவோ நட்பே போல**?** 6

**கொடுத்துங் கொளல்**

இறப்பொழிக்கும் மருந்தனைய, எங்குங் காணா
இருநெல்லிக் கனிஒன்றை நெடுமான் அஞ்சி
மறைந்திருந்து தானுண்ணும் மனமே இல்லான்
கொடுத்துவக்கும் மாண்புடையன் ஈர நெஞ்சன்
சுரக்கின்ற அன்பூற அவ்வை என்னும்
சொற்கிழத்திக் கீந்துவந்தான் என்ற செய்கை,
சிறப்பிருக்கும் பண்பினர்க்குப் பொருள்கொ டுத்துங்
கொளல்வேண்டும் நட்பென்ற உண்மை காட்டும் 7

**தெளிந்த நட்பு**

தண்ணிலவின் ஒளிக்கதிர்கள் சாள ரத்துள்
தலைகாட்டி ஒளிசெய்ய, பஞ்சின் [6]சேக்கை
வெண்மலரின் மணம்விரிக்க, தென்றற் காற்று
விளையாடி [7]அவண்திரிய, [8]பொய்யாச் சொல்லன்
கண்மலர்கள் குவித்திருக்க அறியா [9]நல்லாள்
கணவனென அவனருகே துயிலக் கண்டான்
கண்ணியவான் சீனக்கன், பதறல் இல்லான்
கதறல்இலான் அவரிடையே பள்ளி கொண்டான் 8

'உயிரனைய என்நண்பன் [10]தெளிந்த இல்லில்
ஒருதீங்கும் செயஒவ்வான், அறியா திங்கே
அயர்ந்துறக்கம் கொண்டுள்ளான்' என்றி ருந்த
அயிர்ப்பில்லாச் சீனக்கன் நட்பை எண்ணின்
உயிருருகும் ஊனுருகும் உள்ளமெல்லாம்
உருகுமன்றோ**?** நட்டார், தன் மனம்நோ தக்க
செயல்செய்யின் பேதைமைஎன் றுணர்க என்றே
செப்பியநம் வள்ளுவன்சொல் சிந்தை கொள்வீர் 9

**அன்பின் வழிவந்த நட்பு**

அரண்மனையில் தனியிடத்தில் துரியன் காதல்
அரசியொடு சொக்கட்டான் கன்னன் ஆட,

வருகின்ற [11]கொழுநற்கண் டெழுந்தாள்; வேந்தன்
வரவறியாக் கன்னன்முன் றானை பற்றத்
தருமணிமே கலையுகவே கண்டான் அந்தத்
தலைவணங்கா முடியரசன்; துரியன் என்னும்
உருமிடியே றன்னான்என் செய்வ னோஎன்
றுளமொடுங்கி உயிரொடுங்கி நின்றான் கன்னன் 10

தோள்வலிமை படைவலிமை துணையின் வன்மை
சொல்கின்ற வலிமைஎலாம் கொண்ட வேந்தன்
தோள்விழையும் தன்மனையைக் கூசா திங்குத்
தொட்டிழுத்த கையிரண்டைத் தலையை மெய்யை
வாள்வலியாற் பலகூறா ஆக்க வல்லான்,
'எடுப்பதுவோ கோப்பதுவோ மணியை' என்றான்
நீள்அன்பின் வழிவந்த கேண்மை யாளர்
[12]அழிவந்த செய்யினுமன் பொழியார் அன்றோ! 11

**ஈடிலா நட்பு**

மதிமுகத்துக் காதலியாள் தந்த இன்பம்
மழலைமொழிச் செல்வங்கள் தந்த இன்பம்
புதிர்போலும் மேலுலக வீடென் றிங்குப்
புகல்கின்ற இன்பம்அறம் தந்த இன்பம்
மதுவருந்திக் கவிநுகர்ந்து யாருங் காணா
மயலுலகில் பறந்துவரும் இன்ப மெல்லாம்
மதிமிகுத்த நட்பீனும் இன்பம் ஆமோ?
மாநிலத்தீர் உயர்நட்பைப் பேணிக் கொள்வீர் 12

உடல்குறைக்கும் மனக்கவலை என்னும் நோய்க்கோர்
ஒப்பரிய மருந்தாகிப், புண்ணும் ஆற்றித்,
தொடர்கின்ற துன்பத்திற் பங்கு கொண்டு,
துணைநின்று, மகிழ்வாகத் துயரும் ஏற்றுக்,
கெடுவழியில் அறியாமல் செல்லுங் காலை
கிளர்ந்தொளிரும் ஒளிவிளக்காய் வழியுங் காட்டி,
உடனுறைந்து தோள்தந்து பகைப்பு லத்து
உயிர்காக்கும் நட்பினைப்போல் உலகில் உண்டோ? 13

**உளங்கவர் நட்பு**

காதலியைப் பிரிந்தேனும் இருத்தல் ஆகும்
கருத்தொன்றும் நண்பரையார் பிரிய வல்லார்?
தீதறியா [13]நட்பதனின் உலகில் நெஞ்சம்
திறந்துரைக்க இடமுண்டோ? எண்ணக் கூட்டம்
மோதுகின்ற பொழுதத்து மனங்க லங்கி
மூழ்காமல் வழிப்படுத்த வல்லார் யாரோ?
சூதறியா நண்பனுளம் திறந்து பார்ப்போர்
துணைசெய்யும் நண்பருருத் தோன்றல் காண்பார் 14

**தீய நட்பு**

தகுதியிலார் தம்புகழே பரப்பு தற்குத்
தாளமிடும் நட்புண்டு; நண்பர் தம்முள்
பகைவிளைத்துக் கோள்சொல்லி இன்பங் காணும்
பதர்மனிதர் நட்புண்டு; மூன்று நான்கு
பகலிருக்கும் சிற்றுண்டி நட்பும் உண்டு;
பண்பில்லாச் சிறுமதியர் செய்த ஒன்றை
மிகவுரைத்து மகிழ்கின்ற நட்பும் உண்டு;
மெதுவாக வஞ்சிக்கும் நட்பும் உண்டு; 15

தொடர்வண்டி நட்புண்டு; பயனில் பேச்சுத்
துணைக்காகத் திரிந்துவரும் நட்பும் உண்டு;
[14]குடர்மிகுந்த தொந்திக்குப் பூசை செய்யக்
கும்பிட்டு வால்பிடிக்கும் நட்பும் உண்டு;
பிடர்சொரிந்து வாய்பிளந்து புகழ்ந்து பேசிப்
பின்புறத்து வசைபொழியும் நட்பும் உண்டு;
கடன்தந்து வளர்க்கின்ற நட்பும் உண்டு;

காசினியீர் இவைஎல்லாம் நட்போ? சொல்வீர் 16

**நட்பு மலர்**

உளமொன்றி உயிரொன்றி நன்மை தீமை
உறுகாலத் துடனொன்றி உயர்ந்த செல்வ
வளமென்றுங் குலமென்றும் சமய மென்றும்
வகைப்படுத்தி உணராமல் வாழின் உள்ளக்
குளமன்றில் நட்புமலர் பூத்துக் காட்டும்;
குவலயத்தில் சிலரேஇப் பண்பு ணர்ந்தார்;
களவொன்றும் நெஞ்சுடையார் பணத்தை வீசிப்
பெறமுயல்வார் கடைச்சரக்கா இந்த நட்பு? 17

**அமைதி தரும் நட்பு**

பகைகுறித்த நாடெல்லாம் பகைவி டுத்துப்
பாரனைத்தும் ஆள்கின்ற மனம்வி டுத்துத்
தொகைமிகுத்த அணுவெடியைக் கைவி டுத்துத்
தொல்லைப்போர் வெறிவிடுத்து நட்பை நாடி
வகைவகுத்து நாடோறும் திரியக் கண்டோம்;
வல்லரசே இவ்வண்ணம் என்றால் நட்பின்
தகைகுறித்து வாய்திறத்தல் எளிதோ சொல்வீர்
தாரணியில் அமைதிக்கு நட்பே வேண்டும் 18

இந்தஒரு குறட்கழகம் வசதி ஒன்றும்
இலாதிருந்தும் தளராத உழைப்பும் நட்பும்
உந்திஎழும் தொண்டுளமும் துணையாக் கொண்டே
ஒளிபெறச்செய் [15]தேனப்பன் எண்ணம் வாழ்க!
இந்தியினால் வடமொழியால் ஆங்கி லத்தால்
இடர்வருமேல் இடுப்பொடிக்கும் வீரம் வாழ்க!
புந்திதரும் குறள்வாழ்க! கழகம் வாழ்க!
புதுமைஎலாம் நிறைந்தொளிரும் தமிழே வாழ்க! 19

---

**பாடற் குறிப்பு:–**

22–7–1956 அன்று காரைக்குடிக் குறள் விழாக் கவியரங்கில், ‘வள்ளுவர் வாக்கில் – நட்பு’ என்ற தலைப்பில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**

1.தமிழவேள்–அரங்கில் அமர்ந்திருந்த திரு.பி.டி.இராசன் (முன்னாள் தமிழக முதலமைச்சர்). 2. பேதுடையார் – அறியாமை உடையவர். 3. பீடு – பெருமை. 4. பாடரிய – பாட அரிய. 5. வடக்கிருத்தல் – வடக்கு நோக்கியிருந்துஉண்ணாது உயிர்துறத்தல். 6. சேக்கை – படுக்கை. 7. அவண் – அங்கே. 8. பொய்யாச் சொல்லன் – பொய்யா மொழிப் புலவர். 9. நல்லாள் – சீனக்கன் மனைவி. 10. தெளிந்த இல் – மனம் தெளிந்து பழகும் வீடு. 11. கொழுநன் – கணவன். 12. அழிவந்த – அழிவு தரும் செயல். 13. நட்பதனின் – நட்பைவிட. 14. குடர் – குடல். 15. தேனப்பன் – பொறியாளர் தேனப்பன் காரைக்குடி குறட்கழகம் தோன்றக் காரணமாயிருந்தவர். குறட்கழகத் தொடக்க முதல் பல ஆண்டுகள் செயலராகப் பணியாற்றிய நன்மனத் தொண்டர்.

## 24. தெரு விளக்கு

**(நூல்:–பாடுங் குயில்)**

மிகத்துணி வுடனே நடுத்தெரு வோரம்
விரவிய இருளில் நிலைபெறும் ஓர் தொழிலேன்
அகப்பொருட் கள்ளர் புறப்பொருட் கள்ளர்
அவரவர் செல்வார் அறிந்தும் வாய்மொழியேன் 1

பனியிலும் மழையிலும் நனைவதும் உண்டு
பகல்தரும் வெயிலில் காய்வதுந் தினமுண்டு
தினையள வெனினும் தனிநலம் இன்றிச்
செய்திடும் பொதுநலஞ் சேரும் மனமுண்டு 2

புகுமிருள் கண்டால் எனைவர வேற்றுப்
புவியோர் தொழுவார் புகழ்வார் கைகுவித்தே
பகல்வரும் அதன்பின் எனைமதி யார்இப்
பாரினர் செயலை நகைப்பேன் வாய்குவித்தே 3

ஊரார் அனைவரும் விழிதிற வாமல்

உறங்கிடு வார்நான் இரவினில் விழித்திருப்பேன்
சோரா விழியிமை ஒருநாள் சோர்ந்தால்
தூற்றுவர் பழிகள் சாற்றுவர் பொறுத்திருப்பேன் 4

தெருவிலென் னருகினில் சிறுவர்கள் ஆடித்
திரிந்திடு வார்மனம் மகிழ்ந்திருப் பார்விருப்பால்
ஒருகால் உடையேன் நடவா நிலையேன்
ஓடிட முடியாக் கவலையில் நானிருப்பேன் 5

கலைபயில் சிறுவர் கல்வியைப் பெறஎன்
காலடி நின்றே தவமிருப் பார்தெருவில்
விலைதர முடியாக் கலையினைக் கற்றே
மேன்மைகள் எய்தினர்; நூல்களிற் பேர்தெரியும் 6

வறியவர் உரியவர் எனும்நிலை யின்றி
வளரொளி எவர்க்கும் வழங்கிடும் முறை கொண்டேன்
சிறியவர் எறியும் கல்லடி பட்டுச்
சிதறிட என்முகம் சீர்கெடும் நிலைகண்டேன் 7

என்னருள் ஒளியால் இருளது நீங்கி
எழில்பெறும் உலகம் இனிமையில் திளைத்திருக்கும்
பன்னரும் நலங்கள் பாலித் திடுமெனைப்
பழுதுறச் செய்தால் பண்பா நிலைத்திருக்கும்? 8

## 25. இசை மயக்கம்
**(நூல்:—பாடுங் குயில்)**

இசையால் மயங்கும் மயக்கம் —அதனை
எதுதான் உலகில் நிகர்க்கும்
—இசையால்

கசியா மனமுங் கசியும் — முன்பு
காணா உலகம் தெரியும் — நல்ல
—இசையால்

கள்ளின் மயக்கம் தெரியாது — சுவைத்துக்
களித்தவர் தெருவழி வரும்போது
கொள்ளும் மயக்கம் அறிவேனே — உவமை
கூற நினைத்தால் முடியாதே
—இசையால்

வானில் மதியம் நடமாட — பொதியம்
வாழும் தென்றல் இசைபாடத்
தேனின் மொழியாள் உறவாட — வந்து
சேரும் மயக்கம் நிகராமோ?
—இசையால்

---

**பாடற் குறிப்பு:—** 19.11.1976 ஆம் நாள் பாடியது.

## 26. இசையால் வந்த மயக்கம்
**(நூல்:—பாடுங் குயில்)**

இசையால் வந்த மயக்கமடி — உன்
இன்பமும் என்னுளம் மறக்குமடி
—இசையால்

பசியோ இல்லை பாயோ தொல்லை
பாலும் பழமும் பார்ப்பதும் இல்லை
—இசையால்

பொருளும் உணர்வும் பொருந்திய பாடல்
பொழுதெலாம் கேட்டால் போகுமே வாடல்
இரவும் பகலும் என்மனம் நாடும்

எத்தனை எத்தனை இன்பங்கள் கூடும்
—இசையால்

குழலோ யாழோ கொடுத்திடும் ஒலியால்
கோதைநின் வாயிதழ் படைத்திடும் குரலால்
அழகோ வியமே அல்லல்கள் பறக்கும்
ஆயிரம் பாடல்கள் என்னிடம் பிறக்கும் .
—இசையால்

## 27 சிலம்பட்டும் போர்முரசு!

(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

மதவுணர்ச்சி ஒருபுறத்தே ஒதுங்கி நிற்க
மானமிகு மொழியுணர்ச்சி நிமிர்ந்து நிற்கப்
புதுமலர்ச்சி கொண்டெழுந்தே உரிமை வேண்டிப்
போர்முரசு கொட்டியது கிழக்கு வங்கம்;
விதிர்விதிர்த்துக் கொதித்தெழுந்த யாகி யாகான்
வீரத்தை மறந்துவிட்டு வீம்புக் காகக்
கொதிகலத்திற் கையிட்டான்; வங்க மக்கள்
குருதிதனைப் பருகுதற்கு வெறியுங் கொண்டான்; 1

போர்வெறியன் ஏவிவிட்ட படையின் கூட்டம்
புன்மைமிகு வெறியாட்டம் ஆடக் கண்டோம்;
கார்குழலார் கற்பழித்துக் கொடுமை செய்து
கருவுற்ற மாதர்தமைச் சீர ழித்து
நீர்வழியும் விழிடனே குழந்தை யெல்லாம்
நின்றலறப் பெற்றோரைச் சுட்டெ ரித்துச்
சார்மன்னன் ஆட்சியினை விஞ்சி விட்ட
சரித்திரத்தைப் படைத்ததுகாண் அந்தக் கூட்டம். 2

குண்டுமழை பொழிந்தாலும் தமது மெய்கள்
குருதிமழை பொழிந்தாலும் கலங்கா வுள்ளங்
கொண்டெழுந்த வங்கத்தார் அஞ்சா ராகிக்
கொடுங்கோலர் கொட்டத்தை எதிர்த்து நின்றார்;
பெண்டிழந்தார் மகவிழந்தார் வீடி ழந்தார்
பெருமான மட்டுமவர் இழக்க வில்லை
''கண்டிடுவோம் உரிமைபெறும் வங்க தேசம்
காத்திடுவோம்'' என்றெழுந்தார் சிங்க மாந்தர் 3

தூண்டிவிடும் அமெரிக்கர் சொல்லை நம்பித்
தூண்டிலுறும் புழுவான பாகித் தானம்
தாண்டியது நீதிதனை; வெறியின் வேகம்
தலைக்கேறி ஆடியது; தேர்தல் நாளில்
வேண்டுமிவர் எனமக்கள் வாக்க ளிக்க
வென்றுவரும் ரகுமானை வஞ்சப் பேச்சால்
கூண்டதனில் அடைத்துவிட்டு மேடை ஏறிக்
கொக்கரித்தான் அறப்போரை அறியா வீரன் 4

முறையற்ற செயலிதுவென் றுலகை நோக்கி
முறையிட்டோம் மனமுள்ள கார ணத்தால்;
தரைமுற்றுஞ் சென்றுநிலை சொல்லி வந்தோம்;
தவித்துவரும் மக்களுக்குப் புகலுந் தந்தோம்;
வெறியுற்ற மனப்போக்கர் வலிய வந்து
விண்வெளியில் பறந்துநமைத் தாக்கி நின்றார்;
நெறிகெட்டு வந்தவர்க்குப் பழைய பாடம்
நினைவூட்ட நிமிர்ந்தெழுந்தோம் ஒன்று பட்டோம். 5

குண்டொன்று தலைவீழக் குருதி வெள்ளம்
கொட்டிடவும் வானத்தில் பகைவன் ஊர்தி
கண்டங்குச் சுட்டெரித்து வீழ்த்தி விட்டுக்
கண்மலர முகமலர அதனைப் பார்த்துக்
கொண்டுயிரை விட்டானே எனது நாட்டுக்
கொற்றவனாம் ஆறுமுகம் அவனைப் போன்றோர்

மண்டமரில் திறங்காட்டப் பாகித் தான
 மாவீரர் புறங்காட்ட வெற்றி கண்டோம். 6

மூட்டிவிட்ட சினத்தீயில் யாகி யாகான்
 முகம்பொசுங்கி அகம்நசுங்கி இருளில் வீழ்ந்தான்
பூட்டுடைத்து வெளிவந்தார் வங்க மாந்தர்;
 பூத்துவிட்டான் புதுக்கதிரோன் கிழக்கு வானில்;
[1]கேட்டுமனங் கொண்டிருக்கும் பூட்டோ மட்டும்
 கிலிபிடித்துந் தோல்வியினால் புலம்பு கின்றான்;
நாட்டவரை ஏமாற்ற உளறு கின்றான்;
 நல்லறிவு பெற்றதுபோல் தோன்ற வில்லை. 7

புலம்பட்டும் நமக்கென்ன? புத்தி கெட்டுப்
 போர்முறையே விருப்பமெனில் வந்த பின்னர்க்
கலங்கட்டும் தனித்திருந்தே; அமைதி ஒன்றே
 காலமெலாம் விரும்புகிறோம்; அதைக்கெ டுத்துப்
புலங்கெட்ட பூட்டோவும் போர்தொ டுத்தால்
 பொன்றட்டும் நமக்கென்ன? நமது நாட்டில்
சிலம்பட்டும் போர்முரசு! மக்கள் வெள்ளம்
 திரளட்டும் ஒருமுகமாய்! ஒருகை பார்ப்போம். 8

---

**பாடற் குறிப்பு:–** பாகித்தான் தொடுத்த போரில் இந்தியாவின் வெற்றி கண்டு பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** கேட்டுமனம் – கெடுதலையுடைய மனம்.

## 28. எது துணிவு?

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

நல்லவை எண்ணுக! நயம்பட எழுதுக!
வல்லமை உளதேல் வாய்மையைப் பேசுக!
செயலெது செய்யினும் சிறிதள வேனும்
பயன்பிறர் பெறவும் நயந்தது புரிக!
இவைநிகழ் பொழுதில் இடர்பல நேரினும்
துவளுதல் இன்றித் தொடருதல் வேண்டும்;
'இதைத்தான் [1]செய்வல்' என்றொரு வரையறை
'இவ்வணந் தான்செயல்' என்றொரு வரன்முறை
அமைத்ததன் வண்ணம் ஆற்றிடல் வேண்டும்;
நமைப்பல துயரம் நண்ணிய போதும்
இமைப்பொழு தேனும் இழுக்கா வண்ணம்
தொடருதல் ஒன்றே துணிவெனத் தகும்தகும்;
எழுதுதல் பேசுதல் இயற்றுதல் அனைத்தும்
பழுதுகள் தருமேல் பகரார் துணிவென;
எதையும் செய்தல் எப்படி யுஞ்செயல்
இதனைத் துணிவென ஏலார் சான்றோர்;
அறநெறிச் செயல்கள் ஆற்றலே துணிவு
மறநெறிச் செயலின் மறுபெயர் கயமை
அதனால்
துணிவே துணையெனத் தொடருக நீயே

---

**பாடற் குறிப்பு:–** 22.12.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. செய்வல் – செய்வேன்.

## 29. சிவப்பு விளக்கு

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

ஒன்றிரண்டு பெற்றிருந்தால் மகிழ்ச்சி பொங்கும்
 உள்ளமெலாம் அன்பூறும்; கண்ணே முத்தே

என்றிருந்து கொஞ்சிமகிழ்ந் தின்பங் காண்போம்;
எட்டென்றும் பத்தென்றும் பெருக்கி விட்டால்
கன்றிமனம் நோவதலால் இன்பம் ஏது?
கனிவேது? குலவிவரும் அன்பும் ஏது?
முன்றில்தனில் வரும்போதே எரிந்து வீழ்வோம்,
முப்பொழுதுங் கடுகடுப்பே முகத்தில் வாழும். 1

தந்தைக்கும் நலனில்லை; சுமந்து பெற்ற
தாய்தனக்கும் நலனில்லை; பெருகு மக்கள்
மந்தைக்கும் நலனில்லை; வீடும் நாடும்
வளஞ்சிறக்க வழியில்லை; இவற்றை எல்லாம்
சிந்திக்கும் மனமில்லை; சொன்னால் கேட்கும்
செவியில்லை; இவ்வாறே நடந்தால் நம்மை
நிந்திக்கும் வருங்காலம்; இல்லை என்ற
நெடுஞ்சொல்லே எத்திக்கும் நிறைந் திருக்கும். 2

முக்கோண வடிவத்தைக் காணும் போது
முகங்கோணுஞ் சிலருக்கு; நாட்டு மக்கள்
எக்கேடு கெட்டாலும் தம்மி னத்தார்
இனிதாக வாழ்வதுதான் அவர்தங் கொள்கை;
தக்கார்தம் நெஞ்சமெலாம் தாம்பி றந்த
தாய்நாட்டின் நலம்நினைக்கும்; குடும்பத் திட்டம்
எக்காலும் தமதுநலத் திட்ட மென்றே
எல்லாரும் நினைந்தொழுகின் நாடு வாழும் 3

கருப்படியில் விளையாடிக் களிக்கும் மாந்தன்
காமமெனும் நெருப்படியில் நின்று கொண்டே
நெருக்கடியைத் தன்வீட்டில் ஆக்கி விட்டு,
நெடுந்தெருவில் பள்ளிகளில் ஊரில் எங்கும்
நெருக்கடியை ஆக்குகிறான்; ஆள்வோர்க் கென்றும்
நெருக்கடியை ஆக்குகிறான்; இவனால் நாட்டில்
உருப்படியாய் நலமொன்றும் வளர்வ தில்லை
ஒளிநெருப்பில் அவன்நலமும் கருகித் தீயும். 4

செல்வழியில் இடர்ப்பாட்டை முன்னு ணர்த்தச்
சிவப்புநிற விளக்கொன்று வைத்தல் போல
இல்வழியில் இடர்ப்பாட்டை முன்னு ணர்த்த
இருப்பதுதான் முக்கோணச் செவ்வி ளக்கு;
நல்வழியில் நடந்துசெல நினைவோர் அந்த
நலம்பயக்கும் ஒளிவிளக்கைத் துணையாக் கொள்வர்;
சொல்வழியைக் கேளாரேல் விளக்கி ருந்தும்
தோண்டுகுழி வீழ்ந்தழியும் மூடர் ஆவர். 5

## 30. முன்னறிவிப்பு

(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

தனிமையிலே ஒருவெள்ளி கிழக்கு வானில்
தகதகத்துக் கண்சிமிட்டி நிற்க எங்கள்
இனிமையது வளர்ந்துவரக் கண்டோம்; ஆனால்
எங்கிருந்தோ ஒருகோழி கூவக் கேட்டோம்;
நனிமகிழும் எமக்கிரவு கழிந்த தேயோ?
நலமறியாக் குரற்கோழி வாய்தி றந்தால்
இனிவிடியல் வருமென்னும் அறிவிப் பன்றோ?
எனமயங்கி அதன்குரலை வெறுத்து நின்றோம். 1

இன்பத்தின் பங்காளி யாகி நின்றாள்
இணைவிழிக்குள் படர்ந்திருக்கும் நிறத்தை விஞ்சப்
பொன்பற்றி உருக்கியதை வார்த்த தைப்போல்
புதியநிற எழிற்கோலம் அடிவா னத்தைப்
பின்பற்றிப் பரவியது; பூமி யெங்கும்
பேரொளியை வீசுதற்குப் பகலோன் வந்தான்
முன்முற்றக் கதவதனைத் திறந்து வைத்தோம்

    முகிழ்த்துவரும் காதலுக்குக் கதவ டைத்தோம் 2

இவ்வண்ணம் வாழுங்கால் ஒருநாள் என்றன்
    எழிலரசி வந்தென்பால் குழைந்த வண்ணம்
'கைவண்ணம் முன்னையினுஞ் சுவைக்கும் வண்ணம்
    காய்வண்ணஞ் சமைத்துள்ளேன் உண்ணும்' என்று;
மெய்வண்ணம் அழகேறும் வண்ணம் வந்தாள்;
    மேலெண்ணம் யாதோஎன் றையங் கொண்டேன்;
ஐவண்ணப் பட்டொன்று பார்த்தா ளென்ற
    அறிவிப்பின் வண்ணமெனப் பின்பு ணர்ந்தேன். 3

ஒருநாள் வாய்குமட்டி மயங்கி நின்றேன்
    உதவாத பித்தத்தின் அறிவிப் பென்றாள்
இருநாளும் அருகிருந்தே இஞ்சிச் சாற்றை
    எலுமிச்சைச் சாற்றுடனே கலந்து தந்தாள்;
மறுநாளவ் வேந்திழைவாய் குமட்டக் கண்டேன்
    மாதுனக்கும் பித்தத்தின் அறிவிப் பென்றேன்;
தெரியாதோ இதுகூடப் போங்க ளத்தான்
    தெரிவையரைத் தாயாக்கும் அறிவிப் பென்றாள். 4

மக்கள்மெய் தீண்டுதல்நம் உடலுக் கின்பம்
    மற்றவர்தம் மொழிகேட்டல் காதுக் கின்பம்
இக்குறளின் பொருளினிக்குஞ் செய்தி சொன்னாய்
    ஏந்திழையே வாழியநீ; எனினும் ஒன்றை
அக்கறையோ டுனக்குரைத்தல் கடமை யாகும்;
    அங்கேபார் சுவரெல்லாம் முக்கோ ணங்கள்!
அக்குறிதான் நம்குடும்ப நலத்தைக் காக்கும்
    அறிவிப்பாம் அளவறிந்து பெறுதல் வேண்டும். 5

பெறுவதற்குள் முக்கோண நினைவு வந்து
    பிதற்றுகிறேன் எனமூக்கில் விரலை வைத்தாய்!
கருவயிற்றாய் முன்னுணர்ந்து நடவா விட்டால்
    கன்னத்தில் விரல்வைப்பாய் பின்னை நாளில்;
திருமணத்தை நடத்திடுவோர், குடும்பப் பாங்கைத்
    தெரிந்துநலம் பெறவிழைவோர் நெற்றி மீது
விரல்வைத்துச் சிந்திக்கும் பழக்கம் பெற்றால்
    விடிவுண்டு நாட்டுக்கும் நமக்கும் என்றேன். 6

சிந்தனையே இல்லாமல் எட்டும் பத்தும்
    சீரழிய மகப்பெறுதல் வீட்டிற் குள்ளே
வந்துபுகும் வறுமைக்கோர் அறிவிப் பாகும்;
    வளமிழந்து நலமிழந்து நாடு தானே
நொந்தழியுஞ் சிறுமைக்கோர் அறிவிப் பாகும்;
    நுண்மதியர் ஈதுணர்ந்தே வீடும் நாடும்
வெந்துயரில் வீழாமற் காப்ப தற்கு
    விளக்குகின்றார் முக்கோணச் சின்னங் காட்டி. 7

என்றுரைத்தேன் மொழிந்தவெலாங் கேட்ட நல்லாள்
    'எழில்கொழிக்கும் நமதில்லம்; நலங்கள் பெற்று
நின்றினிக்கும் நம்நாடு; நெஞ்சில் என்றும்
    நிலைத்திருக்கும் இவ்வெண்ணம்; அதனால் நீங்கள்
நன்றுரைக்கும் படிநடப்பேன்; கட்டுப் பாட்டு
    நலங்காக்கும் பொறுப்புமக்கும் வேண்டு மத்தான்!
என்றனுக்கு மட்டுமிது கடனாம் என்றே
    ஏமாந்து போகாதீர்' என்று ரைத்தாள். 8

## 31. இருண்ட வீடு

**(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)**

வரம்பெல்லாம் கதிர்வளைந்து முதிர்ந்தி ருக்கும்
    வயல்தந்த மணிகுவியும் களஞ்சி யங்கள்,
வரம்பில்லாச் செல்வங்கள், தென்றல் வீசும்

வளமனைகள், குறிப்புணர்ந்து பணிகள் செய்வோர்,
நிறங்குன்றாப் பொன்னணிகள் முதலா யாவும்
நிறைந்ததொரு வாழ்வெனினும் பிள்ளை இன்றேல்
நரம்பில்லா யாழாகும்; உயிர்த்த லில்லா
நன்மண்ணாற் புனைந்தஎழிற் பாவை யாகும். 1

பளபளக்கும் வெண்ணிறத்துச் சுவர்கள், நான்கு
பக்கத்தும் நின்றொளிரும் பளிங்குத் தூண்கள்
வழுவழுப்புத் தரையின்மேல் வண்ணப் பூக்கள்
வகைவகையாச் செய்திருக்கும் பளிங்குக் கற்கள்,
குளுகுளுத்த தென்றல்வரும் சாள ரங்கள்
கொண்டிலங்கும் மாமனைதான்; எனினும் அங்கே
தழுதழுத்த மொழிபேசும் பிள்ளை ஒன்று
தவழ்ந்திலதேல் மலரில்லாச் சோலை யாகும். 2

பெற்றெடுத்த பிள்ளையினைத் தொட்டு ணர்ந்து
பெறும்பயனைப் பெற்றிலதேல் என்ன கையோ?
சிற்றுருவப் பொற்சிலையைத் தூக்கித் தூக்கித்
திளைத்தின்பம் அடையாத்தோள் என்ன தோளோ?
முற்றிவரும் செழுந்தேனைப் பொழியும் வாயின்
முத்தங்கள் பெற்றிலதேல் என்ன கன்னம்?
கற்றவர்க்கும் பொருள்விளங்கா மழலை கேளாக்
காதினர்க்கு செவியிருந்தும் பயன்தான் என்ன? 3

உழைத்தலுத்து வருவோர்க்குக் களைப்பை நீக்கி
உள்ளத்துக் கவலைக்கும் மருந்தாய் நிற்கும்;
பிழைப்புக்கு வழியறியாக் குடிலுக் குள்ளும்
பெருஞ்செல்வங் குவிந்தமனைக் குள்ளும் அன்பு
தழைத்திருக்க ஏற்றிவைக்கும் ஒளிவி ளக்காம்;
தவழ்ந்துவரும் மகவிலையேல் எந்த வீடும்
செழித்திருக்கக் கண்டதிலை இருண்டே தோன்றும்;
சிரிப்பொலியின் எதிரொலியும் கேட்ப தில்லை. 4

இசையினிமை பயக்கும்யாழ் பிள்ளை என்றேன்;
எல்லையின்றிப் பெறின்வாழ்வே உடைந்த யாழாம்;
நசைமிகுந்த பேசும்பொற் சிலையைக் கொண்ட
நல்லதொரு வீடொன்றே கோவில் என்றேன்;
திசைகடந்து வரம்பதனை மீறி விட்டால்
சிதறுண்டு பாழ்பட்ட மண்ட பந்தான்;
பசிமிகுந்த கூக்குரலே கேட்கும் அங்கே
பண்ணொலியோ யாழொலியோ கேட்ப தில்லை. 5

எட்டென்றும் பத்தென்றும் பெற்று விட்டால்
எடுத்தணைக்கும் கைகளிலே இன்பம் உண்டோ?
தொட்டெடுத்துத் தோள்வைத்துச் சுமப்ப தென்றால்
சுமையாகத் தோன்றுமலால் இன்பம் ஏது?
சுட்டெரிக்கும் பசிக்கொடுமை வாட்ட வாடித்
துவண்டிருக்கும் கன்னத்தில் முத்த மெங்கே?
பட்டென்றும் பசியென்றும் கேட்டுக் கேட்டுப்
பதறியழும் அழுகுரலே செவியிற் கேட்கும். 6

கவலைக்கு மருந்தாகும் பிள்ளை; ஆனால்
கணக்கின்றிப் பிறந்துவிடின் அதுவே உள்ளக்
கவலைக்கு விருந்தாகிச் சலிப்பை ஊட்டும்;
காப்பதற்கு வழியின்றித் தவிக்கச் செய்யும்;
உவமைக்கு விளக்கென்று சொல்வ ரேனும்
ஒருவர்க்குப் பலமகவு பிறந்து விட்டால்
அவலத்தைக் காண்பதலால் ஒளியா தோன்றும்?
அவர்அகத்தில் களிப்பேது? சிரிப்பும் ஏது? 7

கதிரவனும் நிலாமகளுங் கூடிப் பெற்ற
கணக்கில்லாப் பிள்ளைகள்தாம் விண்மீன் கூட்டம்;
அதிகஒளி அக்கூட்டம் பெற்ற துண்டோ?
அங்கங்கே மின்மினிபோல் ஒளிரக் கண்டோம்;

புதியவழி பின்பற்றித் திட்ட மிட்டுப்
புகுகின்ற மனமின்றிப் பெருக்கி விட்டால்
மதிமயங்கி ஒளிகுறைந்து துயரந் தோய்ந்து
வழியறியா இருட்டறையாய்ப் போகும் வீடு. 8

## 32. துன்புறவோ பெற்றாள்?
(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

இன்பத்தை வாழ்வதனில் விழையும் மாந்தர்
இருக்கும்நிலை யுணர்ந்துமகப் பெறுதல் வேண்டும்
பன்மக்கள் பெறலொன்றே கடனென் றெண்ணிப்
பலபெறலால் அவர்பொறுப்புத் தீர்வ தில்லை;
துன்பத்தை அவர்காண்ப தன்றி நாட்டின்
துயருக்கும் விதைதூவி விட்டோர் ஆவர்;
நன்மக்கள் எனநாடு போற்றும் வண்ணம்
நலிவகற்றி வளர்ப்பதவர் கடமை யன்றோ? 1

வீட்டுநிலை நாட்டுநிலை அறியா மாந்தர்
வெறும்பருவ நலமொன்றே குறியாக் கொண்டு
கூட்டுணர்வால் ஆண்டுதொறும் தவறா வண்ணம்
குழந்தைகளைப் பெற்றுவிட்டு, வளரும் நாளில்
வாட்டுகிற பிணிநீக்கி உண்டி தந்து
வளர்கல்வி யறிவூட்டிப் பேணிக் காக்க
மாட்டாமல் துயர்க்கடலுள் மூழ்கிக் கண்ணீர்
வடிக்கின்ற குடும்பங்கள் மிகவே கண்டோம். 2

பிணியுழந்து மகவொன்று ஒருபால் வீழும்;
பெரியமகன் கல்விக்குப் பொருளை வேண்டும்;
மணியணிந்த எதிர்வீட்டுச் செல்வப் பிள்ளை
வைத்திருக்கும் தின்பண்டம், பட்டுச் சட்டைத்
துணிவிழைந்தே அடம்பிடிக்கும் மற்றி ரண்டு;
தொடுகறிகள் பற்றவிலை என்று கூறி
அணிவகுத்து நின்றிருக்கும் மூன்று பிள்ளை;
அத்தனைக்கும் என்செய்வான் பெற்ற தந்தை? 3

‘பூப்படைந்த பெண்ணிரண்டை வீட்டில் இன்னும்
பூட்டிவைப்ப தெத்தனைநாள்? கையில் காதில்
காப்பணிகள் ஒன்றில்லை, துணிகள் இல்லை,
கவலையிலா திருக்கின்றீர்’ என்று கேட்டு
நாப்பணிய மொழிந்திருப்பாள் மனைவி நல்லாள்
நாளெல்லாம் இதைநினைந்தே மெலிந்த மெய்யாள்;
சாப்பிடவும் மனமின்றித் துயிலு மின்றித்
தவிப்பதற்கே பிள்ளைகளைப் பெற்று விட்டான். 4

வருவாயோ மிகக்குறைவு மக்கட் செல்வ
வளர்ச்சிக்கோ குறைவில்லை; தீராத் துன்பம்
உருவாகக் கொண்டவன்முன் வீட்டுக் காரன்
ஒரைந்து மாதமென்றான் வாட கைக்கு;
கருவான மாதத்தை எண்ணிக் கொண்ட
கருங்குழலாள் தன்வயிற்றைத் தடவிக் கொண்டாள்
உறுவாழ்வு துன்புறவோ பெற்றாள்? அந்தோ!
ஒன்றிரண்டு பெற்றிருந்தால் துன்பம் ஏது? 5

## 33. புது விதி செய்வோம்
(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

ஒருவனுக்கோர் மனைவியெனச் சட்டஞ் செய்தால்
ஊரிலுளார் அனைவருமே ஏற்க வேண்டும்
ஒருமதத்தை மட்டுமது கட்டு றுத்தும்

ஒருமதத்தைக் கட்டுறுத்த இயலா தென்றால்
அரசெடுத்த திட்டத்தாற் பயனே யில்லை;
அனைவர்க்கும் பொதுவான சட்டம் வேண்டும்
கருவிதைத்த பெருக்கத்தைத் தடுக்க வேண்டின்
கண்ணோட்டங் காட்டாமல் நடத்தல் வேண்டும். 1

மடம்விட்டு நாண்விட்டுத் துணியும் விட்டு
வருமானங் காட்டிவருந் திரைப்ப டங்கள்,
உடம்பொட்டி இதழொட்டிக் கன்னம் ஒட்டி
ஒடிந்துவிழும் இடைபற்றிக் கைகள் பற்றி
இடம்விட்டுப் போகாமல் ஒட்டிக் காட்டும்
இழிவுதருஞ் சுவரொட்டி இவற்றைக் காண்பார்
தடங்கெட்டுப் போகாமல் என்ன செய்வர்?
தவிதவிக்கும் முக்கோணச் சின்னம் அங்கே. 2

மணஞ்செய்ய மகளிர்தமக் கிருபத் தைந்து
வயதாக வேண்டுமென வகுக்க வேண்டும்;
பணஞ்செய்யுந் திரைப்படத்தார் சமுதா யத்தைப்
பாழ்படுத்துங் கெடுகாமக் காட்சி காட்டா
வணஞ்செய்ய விதிவகுக்க வேண்டும்; காமம்
வழிகின்ற கிண்ணங்கள் போன்ற தாள்கள்
குணங்கொய்யப் பெருகுவதைத் தடுத்தல் வேண்டும்;
குடும்பநலத் திட்டங்கள் வெற்றி யாகும். 3

மடமையினைத் தகர்த்தெறிந்து நாட்டு மக்கள்
வளமாக வாழ்வதற்குப் பெரியார் சொன்ன
திடமருவுங் கொள்கைகளை மனத்திற் கொண்டு
தெளிந்துணர்ந்து நடைமுறையில் போற்றல் வேண்டும்
கடமையொடு கண்ணியமுங் கட்டுப் பாடும்
காத்துவருங் குடும்பங்கள் தோன்றச் செய்வோம்
கொடுமைக்கே ஆளாகிப் பாழா காமல்
குடும்பநலங் காப்பதனால் நாடுங் காப்போம். 4

## 34. அணையா விளக்கு
(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

நேரிசை ஆசிரியப்பா

கொடையே வாழ்வின் குறிக்கோ ளாக
உடையோன் அழகன் ஒருதனிச் செம்மல்
திரைகட லோடித் தேடிய செல்வம்
குறைவற வார்க்கும் நறுநெய் யாகக்
கலைத்திறன் முற்றக் கைவலா ரியற்றிய
நிலைத்தநற் கூடம் நெடியதோர் [1]தகழியா
ஏற்றிய விளக்கின் இலங்கொளி பெற்றுத்
தோற்றிய அறிவால் துலங்கிடும் மணிகாள்,
விளக்கெனும் ஒருசொல் விளக்கிடும் பொருளை
உளத்தினிற் புலப்படத் தெரிந்திடல் நன்றாம்;
இருளெனும் ஒருபகை எங்கும் பரந்து
பொருள்தெரி யாவணம் புதைத்ததை மறைத்திடும்!
தெரியாப் பொருளைத் தெள்ளிதின் நமக்குத்
தெரியச் செய்வது செவ்விய ஒளியே;
விளங்காப் பொருளை விளக்கிய ஒளியை
விளக்கென முன்னோர் விளம்பினர்; அதுதான்
உள்ளும் புறமும் ஒளிசெய் வகையால்
கொள்ளும் இருவகைக் கூறெனக் கூறுவர்;
கடல்வளை உலகிற் காரிருள் சூழ்ந்து,
புடைபடு புறத்துப் பொருள்களை மறைத்து,
நேர்படக் காணா நிலையினைத் தந்து
சீர்கெடச் செய்யும்; செய்திடுங் காலை
இருளினை ஓட்டிப் பொருளினை விளக்கி

இருவிழி களிக்க வருமொளி ஒன்று;
மட்புலன் விளக்கி மயக்கந் தவிர்க்குங்
கட்புலன் காணுங் கதிர்விளக் கஃதாம்;
அகமெனு முலகில் அறியாப் பேரிருள்
புகுதலின் நல்லன புரியா தொளித்து,
நேர்படக் காணா நிலையினைத் தந்து,
சீர்கெடச் செய்யும்; செய்திடுங் காலை
மருளினை ஓட்டி மாண்பினை விளக்கித்
திருவுளங் களிக்க வருமொளி ஒன்றாம்;
வருமொளி அதுதான் வளரறி வாகும்;
உட்புலன் விளக்கி உள்ளிடர் தவிர்க்கும்
மெய்ப்புல மாகிய விளக்கிஃ தாகும்;
புறவிளக் கெனவும் அகவிளக் கெனவும்
இருவகைத் தாகும் இயம்பிய விளக்கு;
விண்ணில் தோன்றி விழிக்கொளி நல்கி
மண்ணிற் படுபொருள் கண்ணிற் படும்வணம்
அரைநாள் விளக்கி வரையறை செய்யும்
குறையுடைத் தாகும் கூர்கதிர் விளக்கே;
அகத்தினில் தோன்றும் அறிவெனும் விளக்கோ
மனத்தொளி நல்கும் மாண்பொருள் விளக்கும்;
வரையறை யின்றி வாழ்நாள் எல்லாம்
புரையற ஒளியினைப் போற்றி நல்கிடும்;
[2]தண்மதி யென்னும் ஒண்கதிர் விளக்கும்
நண்ணும் முழுமை நலியும் தேயும்;
[3]உண்மதி யென்னும் ஒளிவிளக் கிதன்பால்
நண்ணும் முழுமை நலிதலும் இல்லை
தேய்தலும் மாய்தலும் சிறிதும் இல்லை;
வாழும் நாளில் வழிவழி சிறந்து
நாளும் வளரும் நந்தா விளக்கு;
தெய்விளக் காயினும் எவ்விளக் காயினும்
பெய்ம்மழை தன்னால் பெருவளி மின்னால்
குறைந்தும் அணைந்தும் மறைந்திங் கொழிவன;
அகல்விளக் காயினும் அகல்விளக் காகும்;
பெரும்புய லாயினும் பேரிடி யாயினும்
வரும்பொழு திங்கே உறுதுய ரில்லா
அணையா விளக்கே அறிவெனும் விளக்கு
குறையா விளக்கே குலவுமெய் விளக்கு;
நினைத்தெழும் அறிவெனும் நேரிய விளக்கே
அனைத்துல கெங்கும் அகல்விளக் காகும்;
பொய்விளக் காகிய புறவிளக் கதனினும்
மெய்விளக் காகிய அகவிளக் கொன்றே
தலைவிளக் காகும்; தக்கோர் விழையும்
நிலைவிளக் காகும் நினைவினிற் கொள்க
கைவிளக் கில்லான் காரிருள் நெறியிற்
செய்வதொன் றறியான், செல்வழி தெரியான்
எதிர்வரும் உருவினை இன்னதென் றுணரான்,
மிதிபடுங் கயிற்றினை மேவிய அரவெனக்
குதிபடத் தாவிக் கோவென் றலறுவான்,
எஞ்சிய சிறுமரம் எதிரிற் றோன்றிடின்
அஞ்சியும் நடுங்கியும் ஐயஓ பேயென்
றாடிய காலுடன் ஓடிட முயல்வான்,
ஓடிட முடியா துடலெலாம் வியர்ப்பான்;
உயிர்ப்பும் அடங்கி ஒடுங்கிய தோவென
அயிர்க்கும் வகையி லமைந்து கிடப்பான்;
வழியிடை மேவும் குழியும் மேடும்
தெளிவுற அறியாது திணறுவன் கலங்கி;
ஏறியும் இறங்கியும் இடறியும் நெறிதடு
மாறியும் மயங்கியும் மனத்துய ரெய்தி,
அழிதுய ருற்றே அலமந் தேகுவன்
விழியொளி பெறாற்கு விளைவன இவையாம்
மதியொளி பெறானும் மடமையிற் சென்று
கதியொன் றறியாது கலங்குவன் இவ்வணம்;
எதிர்நாள் வருவதை இன்னதென் றுணரான்;
ஒன்றைமற் றொன்றாப் பிறழ்ந்திட வுணர்ந்து

பொன்றுவன்; ஒன்றும் புரியா தொழுகுவன்;
தீதும் நன்றுந் தெரியா திறங்கி
வேதனைக் குழியில் வீழ்ந்து மயங்குவன்;
ஆதலின் வாழ்வில் ஆய்ந்து நன்னெறி
ஈதென வுணர்ந்தே இன்ப மெய்திட,
நல்லன தீயன நாடி யறிந்து
செல்வழி நோக்கிச் சென்றிட உய்ந்திட
அறிவெனும் விளக்கினை அடைந்திடல் வேண்டும்;
உலக மாந்தர் நிலையினை நோக்கின்
விலகிய நெறியே விழைவது கண்டோம்;
அன்பும் பண்பும் ஆர்ந்துநம் மாந்தர்
இன்ப வாழ்வில் இலங்கிட விழைந்தேம்
அவர்தாம்
துன்ப வாழ்வே துணையெனக் கொண்டு
தொடர்வது கண்டு துவண்டதெம் முளமே;
இடருறல் கண்டேம் [4]இனைந்ததெம் மனனே;
விளக்கொன் றிருந்தும் விளங்கா மாந்தர்
கிணற்றில் வீழும் கெடுநிலை யுற்றார்;
காலைக் கதிரவன் தோன்றிய பிறகும்
நீளத் துயிலுதல் நெறியோ? முறையோ?
அறியாப் பேரிருள் அகற்றிட எழுந்தான்
நெறியால் முறையால் நீள்கதிர்ச் செல்வன்;
எழுக எழுக என்றினிப் பாடுதும்
தொழுக தொழுக சுடரெனப் பாடுதும்;
தூண்டும் விளக்கெனத் துலங்கிடும் மணிகாள்
வேண்டும் வேண்டும் விழிப்பினி வேண்டும்;
நும்பா லமைந்துள நுண்ணறி வொளியைக்
கண்போற் காக்கக் கருதும்நும் ஆசான்
தூண்டத் தூண்டத் துலங்கிடும்; ஆதலின்
தூண்டும் விளக்கெனச் சொல்லினம் நும்மை;
அத்தகு விளக்கினை அனுகிய யாமும்
ஒத்தநன் முறையால் தூண்டுதல் உரியேம்;
அயன்மொழிப் பற்றெனும் ஆரிருள் நீங்கிட,
உயர்மொழி தாய்மொழி ஒன்றே விளங்கிட,
அணையா விளக்கென ஆக்குதல் எங்கடன்
துணையாய் வருகெனத் தூண்டுதும் யாமே;
எம்மொழி யாயினும் அம்மொழிக் கடிமை
செய்ம்முறை வேண்டேல், செந்தமிழ் வேண்டி
எழுக எழுக என்றுமைத் தூண்டித்
தொழுக தொழுக சுடரென
மொழிவதே எங்கடன் முயலல்நும் கடனே.

---

**பாடற் குறிப்பு:–** காரைக்குடி அழகப்பர் கலைக் கல்லூரிக் கவியரங்கில் பாடியது – 20.10.1967.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தகழி – அகல்விளக்கு. 2. தண்மதி – குளிர்நிலா. 3. உண்மதி – அறிவு. 4. இனைந்தது – வருந்தியது.

## 35. குயில்பாட்டு

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

பாரதியின் பாமலர்கள் பற்பலவாய்ப் பூத்திருக்கும்
சீருயர்ந்த பூங்காவுட் சென்று குயிற்பாட்டை
நட்ட நடுஇரவில் நான்சுவைத்தேன்; அப்பாட்டில்
தொட்டஇட மெல்லாம் சுவையேறி நின்றதம்மா!
‘முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப்’
பன்னிப் படைத்தளித்த பாவளத்தை என்னென்பேன்!
காதல் வெறியேறிக் கள்மயக்கந் தானேறி
மோதித் துளைக்குமொரு மோகத் துயராலே
புத்தி தடுமாறிப் பொம்மையெனத் தான்நடந்து

நத்தி மலர்ச்சோலை நான்கு புறந்தேடிக்
கானக் குயிலிசைத்த காதல் நெடும்பாட்டால்
மோனப் பெருவெளியில் மோகப் பெருமயக்கில்
அக்குயிலி கள்ளிதழை ஆசையோடு முத்தமிட்டுச்
சொக்கிச் சுகந்தனிலே சொல்லெல்லாஞ் சூடேற்றிப்
பாட்டை வடித்தெடுத்துப் பக்குவமாத் தேன்கலந்து
நாட்டுக் களித்தஒரு நற்பாங்கை நான்சொலவோ?
மாஞ்சோலை வான்கிளையில் வண்ணக் குயிலிருந்து
தீஞ்சுவையிற் பாடுந் திறத்தினைத்தான் செப்புவனோ?
இன்ப வெறியேறி ஏக்கம் மிகவாகித்
துன்பங் கலந்திருக்கத் தோகைக் குயில்பாடும்
பாட்டின் இயல்பைத்தான் பாடுவனோ? அப்பாட்டைக்
கேட்டுக் கிறுகிறுத்த கேண்மையைத்தான் செப்புவனோ?
மண்ணில் நிகரில்லா மங்கையினைக் கண்டவுடன்
நண்ணித் தழுவி நலம்நுகர்ந்து வேறின்றி
'ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவி' விழிமூடி மேலான இன்பமெனும்
காதற் சுரத்தாற் கவிஞன் தனைமறந்து
மேதக்க பாட்டிசைத்து மேல்நோக்கிச் செல்லுங்கால்
கையிற் கிடந்திருந்த காரிகையாள் தான்மறைய
ஐயவோ என்றரற்றி ஐயன் மிகப்பதறிப்
பாட்டை முடிக்காமல் பாதியிலே விட்டுவிட்ட
பாட்டுத் திறத்தைத்தான் பாடியிங்குக் காட்டுவனோ?
கட்டுக் கதைகூறிக் காவியமாப் பாடிவைத்த
கட்டுக் கடங்காத கற்பனையைக் கூறுவனோ?
ஓங்கும் மலையருவி ஓடோடி வந்திறங்கித்
தேங்காமற் பாய்ந்து திரண்டோடும் ஆற்றினைப்போல்
வேகங் குறையாமல் வீறுற்றுப் பாட்டாகப்
போகின்ற சொல்லோட்டப் பொற்பைத்தான் சொல்லுவனோ?
கொம்பின் எருதாய்க் குயிலாய்க் குரங்காகி
நம்பி இளவரசாய் நாயகியாய்ப் பாடுவதும்
பெண்ணாகி ஆணாகிப் பேசுங் கதைக்கிங்கே
கண்ணாகி நிற்கின்ற காவியத்தில் பங்கேற்போர்
அவ்வவராய் நின்றே அழகாகப் பேசுகின்ற
செவ்வியநற் போக்கினையும் செப்பி விளக்குவனோ?
சொல்லுங் குயிலிசைத்த சோகத்தைச் செப்புவனோ?
கொல்லுங் கொடுங்காதல் வேகத்தைக் கூறுவனோ?
நல்ல அணிநயமும் நாடும் உவமைகளும்
சொல்லின் தொடர்நலமும் சொற்செட்டுங் காட்டுவனோ?
காதற் குரங்காரைக் கண்ட குயிலங்கே
ஓதும் முறையினுக்கோர் ஒப்புண்டோ? அக்குயில்தான்,
''கூனி யிருக்குங் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தம் சாதிக்கு மாந்தர்நிக ரோ''வென்று
வஞ்சப் புகழ்ச்சியால் வாரி விடுஞ்சொல்லை
நெஞ்சில் நினைத்தாலே நேரும் பெருஞ்சிரிப்பு;
வாய்ச்சொல்லை நம்பிவிட்ட வற்றற் சிறுகுரங்கு
போய்ச்செய்த சேட்டைகளும் பூரித்துப் பேசியதும்
கூறும் அழகைத்தான் கூறுவனோ? ஆற்றல்மிகும்
ஏறு வருகைதர இன்குயிலி அவ்வெருதைக்
''காமனே மாடாகக் காட்சிதரும் மூர்த்தியே
பூமியிலே மாடுபோற் பொற்புடையார் யார்?'' என்று
பாரித் துரைத்துப் பலவும் புகழ்வதுபோற்
கூறி யிருப்பதைத்தான் கூறி விரிப்பேனோ?
நல்ல ஒளிநல்கும் ஞாயிற்றைப் பாடுகிறான்:
''புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயும் சோதி''எனக்
காலை எழும்புங் கதிரோனைக் கூறுமுறை
மேலைப் புலவரையும் மிஞ்சிவிட்ட தென்பேனோ?
நாதத்தில் சேரும் நயத்தை வியந்துரைக்கும்
போதத்தை எப்படிநான் போற்றி உரைத்திடுவேன்!
என்றுநான் ஏங்கி இருக்கையிலே ஓர்குயில்தான்
என்றன் மனக்கவலை ஏகும் படியாகக்
குக்குக்கூ குக்குவெனக் கூவி வரல்கண்டேன்;

எக்களிப்பு மீதூர்ந் தெழுந்திருந்தேன் அக்கணமே
நானுங் குயிலானேன் நாடித் தொடர்ந்ததனைத்
தேனே திருமகளே தித்திக்குந் தெள்ளமுதே,
யாரென் றெனக்குரைப்பாய் என்றேன்நான்; அக்குயிலி,
"பாரதியின் காதற் பசுங்குயிலி நானேதான்"
என்றுரைக்க நற்குயிலே உங்கள்கவி பாரதியை
நன்று விரும்பியபின் நாற்காலி மாடனையும்
நீள்வால் குரங்கனையும் நெஞ்சில் விருப்போடு
தாழ்காதற் பேச்சு மொழிந்தாய் சரிதானோ?
நல்ல செயலிதுவோ? நானறியச் செப்பென்றேன்;
"புல்லும் மனத்தாற் புகுந்த எதிரிகளை
வெல்லும் வகையறியேன் வெற்றுக்குப் பொய்ம்மொழிகள்
சொல்லிக் கழித்ததன்றிச் சூதொன்றும் நானறியேன்"
என்றுவிடை கூறி இனிதிருக்க நானமர்ந்து
நன்று குயிலே நமக்குகந்த பாரதிதான்
வேதாந்த மாக விரித்த பொருளுரைகள்
ஏதேனும் உண்டோ? எனக்கதனைக் கூறாயோ?
என்று நான் கேட்டேன்; இனியகுயில் வாய்திறக்க,
கொன்று தொலைக்கக் கொடும்பாவி ஓர்கயவன்
கல்லை எடுத்துக் கவண்வைத் தெறிந்தானே!
தொல்லை மிகவாய்த் துடித்து விழுந்தேன்நான்;
பஞ்சு பிதுங்கும் பழைய தலையணையைத்
தஞ்சம் புகுந்த தளிர்மேனி மூட்டைகள்தாம்
கொஞ்சி விளையாடக் கூம்புமிரு கண்மலர்ந்தேன்
நெஞ்சத் தவிப்பு நெடுங்கனவாய்ப் போனதந்தோ!
பாரதியார் நற்குயிலின் பாட்டுக்குள் வேதாந்தம்
யாரறியச் சொல்லிடுவார் இங்கு.

---

**பாடற் குறிப்பு:—** காரைக்குடி இந்து மதாபிமான சங்கக் கவியரங்கில் பாடியது — 11.9.1961.

## 36. செஞ்சொற் சிலம்பு
**(நூல்:—தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

செஞ்சொற் சிலம்பிற் செறியுஞ் சுவையதனை
நெஞ்சிற் சிறிதே நினைத்தாலும் மெய்சிலிர்க்கும்
சேரநன் னாட்டிற் செழித்துயர்ந்த நற்பலவைக்
கீறியதன் கோதகற்றிக் கிட்டுஞ் சுளையெடுத்துச்
சேலத்து மாங்கனியுள் தேர்ந்து சிலஎடுத்து
மேலிட்ட தோல்சீவி மெல்லியநற் றுண்டாக்கி,
மாற்றுச் சுவையறியா மாமலையின் வாழைதரும்
தாற்றுக் கனியைத் தனியே உரித்தெடுத்துக்,
கோடுயர்ந்த வெற்பின் குறிஞ்சித்தேன் பெய்ததனில்
நீடுநனி ஊறியபின் நேருஞ் சுவைமுழுதும்
செஞ்சொற் சிலம்பில் செறிந்திருக்கும்; அச்சுவையை
விஞ்சும் படியும் விளைந்திருக்கும்; அந்நூலை
ஆழ்ந்து பயின்றால் அறிவெல்லாம் நன்கினிக்கும்;
சூழ்ந்து நினையுங்கால் சொல்லரிய பேரின்பம்
நெஞ்சில் விளைந்து நிலைத்திருக்கும்; சொல்லுங்கால்
அஞ்சுபுல னெல்லாம் அடங்கி ஒருபுலனாம்
வண்ணம் இனித்திருக்கும்; வாலறிவன் பாச்சுவையின்
வண்ணம் முழுதுரைக்க வாயொன்று போதாதே!

**சிலம்பின் பெருமை**

எங்கிருந்தோ வந்தோர் இசைத்த கதையன்றாம்
இங்கிருந்தோர் வாழ்வை இளங்கோ நமக்களித்தான்;
இந்நாட்டார் தென்னாட்டார் என்போர் வரலாறே
முன்காட்டி நிற்க முகிழ்த்தபெருங் காப்பியமாம்;
செந்தமிழ் நாட்டுக்கே செப்பும் உரிமைகொள

வந்ததிருக் காப்பியமே வானவன்செய் பொற்சிலம்பு;
ஒன்றன் மொழிபெயர்ப்பு நூலன் றுலகோர்தாம்
நின்று மொழிபெயர்க்கும் நூலாய் நிலைத்ததுகாண்;
கூறுந் தலைமக்கள் கோலேந்தும் வேந்தரலர்
சேருமவ் வேந்தர் சிறுதுணையே செய்திருப்பர்;
வாழுங் குடிமக்கள் வாய்த்ததலை மக்களெனச்
சூழும் படியாச் சொலும்புரட்சிக் காப்பியமே;

**முத்தமிழ்க்காப்பியம்**

போற்றும் இயற்றமிழிற் பூத்துப் பலவகையில்
ஏற்றமுறும் பாவகைகள் ஏந்தும் இயல்பதனால்,
கேட்டார்ப் பிணித்துக் கிளர்ச்சிகொளச் செய்கின்ற
பாட்டாம் இசைத்தமிழின் பாற்பட் டியங்கிவரும்
ஊசல் வரிமுதலா ஓதும் வரிப்பாட்டும்
பேசுங் குரவைகளும் பேணி இசைப்பதனால்,
கூத்துக் குரியதாக் கூறும் உரைப்பாட்டும்
பாத்தொகையி னூடே பரிந்து நடமிடலால்
முத்தமிழின் காப்பியமாய் முன்னோர் புகழ்ந்துரைக்கும்
வித்தகஞ்சேர் நூலாய் விளங்குவது நம்சிலம்பே;

**தொன்மை வனப்பு**

செய்யுள் தொடர்நிலைக்குச் செப்பும் வனப்பெட்டென்
றையன்தொல் காப்பியன் ஆக்கிப் படைத்தளித்தான்;
சொன்னவகை எட்டனுள்ளும் தொன்மை ஒருவனப்பாம்;
அன்னவனப் பொன்றுக் கணிகலனாக் கொண்டிங்குச்
சேரன் சிலம்பினையுஞ் சேர்த்து மொழிகவெனக்
கூறிய நச்சருரை யாரும் உணர்வார்கள்;

**நீதிநூல்**

ஆராய்ந்து பாராமல் அல்லல் செயுமரசு
சீரோய்ந்து போயொழியச் செய்யும் உயரறமே;
சொற்காத்துத் தற்காத்துச் சோர்வின்றி நன்னெறியால்
இற்காக்குங் கற்புடைய ஏந்திழையைப் பார்போற்றும்;
சூழ்மதியால் மற்றொன்று சூழினும் முந்துருத்
தூழ்வினைதான் வந்தே உறுபயனை ஊட்டிவிடும்;
இம்மூன்று நீதி எடுத்துணர்த்தத் தோன்றியநூல்
அம்மா பெருந்துறவி ஆக்கும் ஒருநூலே;

**நாட்டியல் நூல்**

கூத்தும் இசையுங் குறிக்கும் இயல்பனைத்தும்
பாத்துப் பகர்ந்தணிசேர் பாவில் அரங்கேற்றும்;
அன்பின் விளைந்த அகப்பொருளின் நற்றுறைகள்
இன்பில் அமைந்தங் கிடையிடையே கொஞ்சிவரும்;
அஞ்சலிலாப் போர்முறைக் காகும் புறத்துறைகள்
எஞ்சலிலா தெங்கும் எழிலுடனே ஆர்ப்பரிக்கும்;
நாட்டுவளஞ் சொல்லி நகரின் நலமுரைத்துக்
காட்டும் பொழுதுநகர்க் கண்ணுறையும் பல்வேறு
மக்களெலாம் வாழும் வகைமுழுதுஞ் சித்திரித்துத்
தக்கவணம் பாடிக் குடியிருப்புத் தந்திருக்கும்;
ஒன்பான் மணிபற்றி ஓதும் இயல்புக்குத்
தன்பால் இடந்தந்து சாயா ஒளிநல்கும்;
குன்றினிடைச் சேர்பொருள்கள் கூடிக் குவிந்திருக்கும்
முன்றில்தனை அங்கே முழுமைபெறக் காட்டிநிற்கும்;
அஞ்சு நிலவகைகள், அங்கே நிகழ்திருநாள்,
கொஞ்சும் இசை, கூத்துக் கோலமுடன் கூறிவரும்;
தன்னினத்தைப் புன்மொழியால் தாக்கி யிகழ்மொழிகள்
சொன்னவர்மேற் போர்தொடுத்துச் சூடும் பெருவாகை;
இவ்வண்ணந் தென்னாட் டியல்புமதன் பண்பாடும்
செவ்வண்ணங் கூறுஞ் சிலம்பென்னும் நன்னூலே;

### பெயர்க்காரணம்

செம்பொற் சிலம்பால் சிறந்து விளங்குவதால்
நம்புஞ் சிலப்பதி காரப்பேர் நண்ணுமென்றே
செந்தமிழ்க்கோர் ஆரமெனச் செப்புந் திருநூற்கு
வந்தபெயர்க் காரணத்தை வல்லார் நவின்றிடுவர்;
கோப்பெருந் தேவி, குளிர்முத்தை உள்ளிட்டு
யாப்பமைத்துக் காலில் அணிந்த சிலம்பொன்றாம்;
கண்ணகி நல்லாள்தன் காலில் அணிந்திருந்த
பண்ணுறுநல் மாணிக்கப் பைம்பொற் சிலம்பொன்றாம்;
எந்தச் சிலம்பால் எழிற்பெயரைப் பெற்றதென
வந்ததோர் ஐயம் வளர்ந்து வளர்ந்துவரச்
சிந்தை கலங்கித் தெளிவின்றி நானிருந்தேன்;
முந்தை மொழிப்புலவன் முன்னேற்றப் பாவேந்தன்
எந்தைக்குத் தந்தைஎனும் என்பாட்டன் பாரதிதான்
தந்தஒரு பாடல் தரும்விளக்கம் கண்டுணர்ந்தேன்;
தேருஞ் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்ததமிழ் நாடென் றடிபடைத்தான்
அந்த மணிமொழியால் அன்னை [1]மணிச்சிலம்பே
தந்தபெயர் ஈதென்று சிந்தை தெளிந்தி ருந்தேன்;

### பெண்மை பேணும் நூல்

மங்கல வாழ்த்து மகிழ்ந்துரைத்த பேராசான்
திங்களை முன்போற்றிச் செய்யகதிர் ஞாயிற்றைப்
பின்போற்றிச் செல்கின்ற பெற்றிமையை நாம்சுவைப்போம்;
பெண்போற்றும் காரணத்தால் பேசுகிறார் இவ்வண்ணம்;
கண்ணகியுங் கோவலனுங் காதல் மணங்கொண்டு
பண்ணமைந்த கட்டில் பயில்கின்ற காலைஅக்
காட்சி கதிர்ஒருங்கு காண இருந்ததுபோல்
மாட்சி பெறவிளங்க வாய்ந்த தெனமொழிந்தார்;

கண்டஇரு காதலர்க்கும் காட்டாம் கதிரிரண்டும்
கொண்ட குறிப்புணர்ந்தோம்; கோச்சேரன் காப்பியத்துள்
தன்னே ரிலாத தலைமைபெறும் பேருரிமை
மின்னேர் இடையாட்கே மேவுவதும் நாமறிவோம்;
ஆதலினால் காவியத்தில் ஆட்சிசெயும் பெண்பாலாம்
மாதவட்கு முன்னே மதிப்பளிக்க எண்ணியவர்
திங்களைமுன் போற்றுகிறார் திங்களுமோர் பெண்பாலென்
றெங்கும் இலக்கியத்தே ஏத்துவதும் உண்டன்றோ?

### மங்கல வாழ்த்து

பூம்புகார் தென்மதுரை பொற்புமிகும் வஞ்சியென
ஆம்முறையால் காண்டம் அமைத்து நிரல்செய்து
சோழனுக்கும் பாண்டியற்கும் சொல்லுமெழிற் சேரனுக்கும்
வாழஇடந் தந்து வகைசெய்தார் ஒவ்வொன்றில்;
மாவளத்தான் வெண்குடைக்கு வட்டவுருத் திங்களையும்
பூவளர்க்கும் ஆணைக்குப் பொன்செய் பகலனையும்
காவிரியின் தண்ணளிக்குக் காரினையும் ஒப்புரைத்து
நாவுயரப் போற்றி நகரின் நலம்போற்றி
மங்கல வாழ்த்தாக வாழ்த்தி முதன்முதல்
அங்கம் பெறும்புகார்க் காண்டத்துள் ஆக்கிவைத்தார்;
மாமுடிகள் தாங்கிவரும் மாமன்னர் மூவர்க்கும்
ஆமுரிய நீள்கதையை ஆக்கும் பெருமகனார்
கோடுயர்ந்த ஞாலத்தின் கோவடிகள் அன்னவர்தாம்
கோடுதல் இல்லாமல் [2]கோல்முனைபோல் நேர்நின்று
மூவர்க்கும் ஓர்நிகரில் யாவர்க்கும் ஏல்வகையில்
காவியத்துட் பாடல் கடனாகும்; ஈதுணர்ந்தும்
பாண்டியற்குஞ் சேரனுக்கும் பாடுமொரு மங்கலமாம்
ஈண்டுபுகழ் வாழ்த்தொன் றியம்பாத காரணமென்?
குற்றமற்ற கோவலனைக் கோலேந்தும் பாண்டியன்தான்
பற்றித் திருடனென வெட்டிக் கொலைசெய்து
கண்ணகிக்கு மாறாத கண்ணீர் விளைவித்த

பெண்பழிக்கு நாணித்தான் பேசா திருந்தனரோ?
கற்புடைய பெண்மகளைக் காணுங் கடவுளெனப்
பொற்புடனே ஓர்சிலையாப் பூசித்துக் கற்கோவில்
ஆக்கிப் படைத்த அருந்திறலோன் சேரனுக்குத்
தேக்குபுகழ் மங்கலமே செப்பாத தென்கருதி?
தன்னாட்டான் ஓர்வயிற்றுள் தன்னோ டுடன்பிறந்தான்
முன்காட்டும் இந்த முறைமையினால் கூசினரோ?
பாடி யிருந்தொருகால் தேடி யலைவோர்க்குக்
கூடி யடையாமல் ஓடி ஒளிந்ததுவோ?
ஆரே அறிவார் அதனுண்மைக் காரணத்தை!
நேரே சிலம்பில் நினைவைப் பதியவைத்
தின்னும் நுணுகி அணுகுங்கால் எத்துணையோ
பொன்னும் மணியும் புதிதுபுதி தாப்பெறலாம்
கூடும் நலமனைத்தும் கூர்ந்துணர்வீர் நம்மிளங்கோ
பாடுஞ் சிலம்பைப் படித்து.

---

**பாடற் குறிப்பு:**— திருச்செங்கோடு கண்ணகி விழாக் கவியரங்கில் பாடியது— 25.5.1966.

**அருஞ்சொற் பொருள்:**— 1. மணி — மாணிக்கம். 2. கோல் — தராசு.

## 37. நினைந்து மகிழ்கிறேன்
**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

பெரும்பள்ளி பழம்பள்ளி பேர்பெற்ற ஆசான்மார்
கரும்பள்ளித் தருவதெனக் கற்பார்க்குக் கல்விநலம்
தரும்பள்ளி உயர்பள்ளி தனதுழைப்பால் மேல்நிலைக்கு
வரும்பள்ளி வளர்பள்ளி மேன்மேலும் வாழியவே! 1

தமிழியலில் நல்லறிஞன் தமிழண்ணல் எனும்பெயரான்
அமிழ்தினிய பாமணியன் ஆ. பழநி எனுமன்பன்
துமியளவுங் கடன்பிறழாத் தூயமுத்து சம்பந்தன்
தமைமறந்து தமிழ்சொல்லத் தானுயர்ந்த எம்பள்ளி! 2

மீனாட்சி சுந்தரப்பேர் மேவியஎம் பள்ளிதனில்
தானாட்சி செய்துவரும் தாளாளர் தகவென்னே!
நானாட்சி செயக்கல்வி நயமுணர்ந்தார் அன்பென்னே!
தேனாட்சிக் காலமது! சிந்தித்து மகிழ்கின்றேன். 3

வாயிலுக்குட் புகுந்ததுமென் வாழ்வுதனை மறந்துவிட்டுக்
கோயிலுக்குள் அரசனெனக் கோலோச்சி நானிருப்பேன்!
தாயினுக்கு நிகராகத் தமிழூட்டி மாணவரைச்
சேயெனவே நான்புரந்த செயலெல்லாம் நினைக்கின்றேன். 4

சொல்லுக்குப் பொருளுரைப்பேன் சொக்கிடுவர்; கடிந்துரைக்கும்
சொல்லுக்குப் பணிந்திருந்து சுடுசொல்லும் பொறுத்திருப்பர்
மல்லுக்கு வரநினையா மாணவரைப் பெற்றிருந்தேன்
இல்லுக்குள் ளிருந்தோய்வில் இவற்றையெலாம் நினைக்கின்றேன். 5

பள்ளிக்குப் பவளவிழா! தேனாறு பாய்ந்ததுபோல்
உள்ளுக்குள் நான்மகிழ்ந்தேன் ஓதியஅம் மொழிகேட்டு
கள்ளுக்குள் மிதந்துவரும் களிவண்டாய் நான்மிதந்தேன்
அள்ளூற்ற தமிழமுதால் அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன். 6

---

**பாடற் குறிப்பு:**— மீ.சு.உயர்பள்ளிப் பவளவிழா வாழ்த்து

## 38. தலை நண்பன்
**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

நிலைபெறும் நட்புடன் நிற்பைநீ எனவே

தலையில் வைத்துனைத் தாங்கினேன் நண்பா!
இலைநீ என்பால் இன்றெனைப் பிரிந்தனை
நிலையில் இழிந்தாய் நினையா போற்றினேன்?
மருத்துவர் தம்பால் மாதம் ஒருமுறை
திருத்தி நின்னுடல் செழிப்புற வளர்த்தேன்;
[1]ஆடிமுன் நின்றுனை அழகுறச் செய்திட
நாடிய என்கை நலிந்து சோர்வுறத்
தடவித் தடவித் தந்தநல் ஒப்பனை
[2]மடவை நீயோ மறந்தனை பிரிந்தனை;
ஒப்பனை செய்தபின் உன்றன் அழகை
எப்படி எப்படி இருவிழி யாலும்
பார்த்துப் பார்த்துக் களித்தேன்! அன்றைய
நேர்த்திஎன் நெஞ்சில் நிலைத்து நின்றதே!
குலையா தொழுங்குடன் கூடித் திகழ்ந்திடப்
பலநாள் முயன்றேன் இலையே நன்றி!
பணிந்தும் வளைந்தும் பழகினை அன்று
[13]தணந்தாய் இன்று தளர்ந்ததென் மனனே;
பகுத்தறி வில்லாய் படியா திருந்தனை
வகுப்பில் வைத்துனை வளர்த்ததை மறந்தாய்!
கருகரு வெனநீ கண்கவர் வனப்பொடு
வளர்ந்து திகழ்ந்திட வாஞ்சையால் உன்னை
நறுநெய் யூட்டி நாளும் வளர்த்தேன்;
அன்றுநான் தெம்பும் ஆற்றலும் உடைமையால்
ஒன்றிய அன்புடன் ஒட்டி நின்றனை;
இன்றுநான் தளர்ந்தேன் இயல்புநீ மாறினை;
வாழ்விலும் தாழ்விலும் மாறாக் குணத்தொடு
சூழ்வதே நட்பெனச் சொற்றனர் முன்னோர்;
வளமையில் என்னுடன் வளர்ந்தனை இன்றோ
பழமை மறந்தாய் பண்பினைத் துறந்தாய்
என்முன் நில்லேல் இகழ்ந்துனை வெறுத்தேன்;
மண்ணில் முடிநீ மாய்ந்து மடிநீ
கண்முன் காணா தொழிகநீ கடிதே!

---

**பாடற் குறிப்பு:–** தலையின் இழிந்த முடி பற்றிப் பாடியது – 23.9.1975.

**அருஞ்சொற் பொருள்:–**
1. ஆடி–கண்ணாடி. 2. மடவை–அறிவிலி. 3.தணர்ந்தாய்–பிரிந்தாய்.

## 39. புகழ்ச்சியின் பயன்
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

ஆர்வத் துடிப்பால் ஆசைப் பெருக்கால்
பேர்பெற் றொளிரப் பெருகிய நினைப்பால்
ஏதோ எழுதினன் என்பாற் கொணர்ந்தனன்;
தீதோ நன்றோ திறந்துநான் படித்தேன்;
செறிந்த கற்பனை சிற்சில அதனுட்
சிறந்திடல் கண்டேன் சிந்தை மகிழ்ந்தேன்
மகிழ்ந்துளம் நெகிழ்ந்திட வாழ்த்திப் புகழ்ந்தேன்.
புகழ்ந்துரை புகல்வது புரையன் றென்பதால்;
பாவலன் நான்சொலும் பாராட் டுரையை
ஆவலிற் பருகினன் அவனிரு செவியால்;
நாவின் மழையில் நனைந்தனன் குளிர்ந்தனன்
பாவின் திறமெலாம் பயின்றிடப் பலப்பல
காவியம் படைத்தனன் கண்டுநான் வியந்தேன்;
என்மொழி அவற்கோர் ஏணி யாயது;
நன்மொழி நலந்தரும் எனநான் உணர்ந்தேன்;
மற்றொரு கவிஞன் வந்தனன் என்பால்
பற்றுடன் அவன்தன் படைப்பினைத் தந்தனன்;
புகழ்மொழி பொழிந்தேன் புதுப்புது நூல்பல
புகலுவன் எனமனம் பூத்ததோர் நினைவால்;
உருக்கிடும் புகழ்ச்சியை உளத்திடை நிறைத்தனன்;

செருக்கினன்; மீசை முறுக்கினன், விரைத்தனன்;
நிமிர்த்தினன் தலையை; நெருக்கினன் விழியை;
உருத்து நோக்கினன் ‘ஒப்பென என்முன்
நிறுத்திட எவரே நிலத்தினில் உள்ளார்?
யானே பெருங்கவி’ என்றவன் மனத்துள்
தானே சொலிச்சொலித் தருக்கித் திரிந்தனன்;
புதுவன படைக்கும் நினைவதை யிழந்தனன்;
மதுமயக் குற்றென மதிமயக் குற்றனன்;
‘இளங்கோ வள்ளுவர் எத்தனை யியற்றினர்?
உளங்கொளும் ஒவ்வொரு நூலால் உயர்ந்தனர்’
என்றவன் நினைந்தே இழிந்தனன் இழிந்தனன்;
நன்றுரை புகன்றேன் நாவாற் புகழ்ந்தேன்
என்மொழி அவற்கோர் இடுதடை யாயது;
தவறுகள் உண்டாம் தகுவன ஆற்றினும்
அவரவர் பண்பறிந் தாற்றா விடத்தென
ஓதிய மொழிப்பொருள் உணர்ந்தேன் யானே.

---

**பாடற் குறிப்பு:–** 23.12.1975 ஆம் நாள் பாடியது.

## 40. அன்றும் இன்றும்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

சிற்றிளம் பருவம் பெற்றஅக் காலை
உற்றநற் களிப்போ ஓரள வில்லை;
இரவும் பகலும் எய்துமம் மகிழ்ச்சி
அறவே எனைவிட் டந்தோ அகன்றது!
விளையாட் டயரும் இளையாச் சிறுவர்
களியாட் டாடிக் கள்ளமில் மனத்தாற்
பழகினர் நெஞ்சம் இளகினர் அடடா!
கழிந்தஅந் நாளைக் கருதுங் காலை
உயிர்ப்பதுங் கண்ணீர் உகுப்பதும் வியப்பிலை;
இரும்பின் உருளை விரும்பி உருட்டி
வரும்போழ் தின்பம் வளரும் வளரும்!
ஒஓ பம்பரம் ஒன்றே போதும்
தாவா இன்பந் தந்தெனை வளர்க்கும்;
இன்றவை எங்கே? சென்றதும் எங்கோ?
இன்றென் தலையே இயங்கிடும் பம்பரம்
ஒன்றிய கயிறோ ஓயாக் கவலைகள்;
இறக்கை யிழந்தேன் இன்ப வானிற்
பறக்க இயலேன் பறக்கினும் வீழ்வேன்;
அன்றெலாம் இன்பம் அழைக்குமுன் வருமே!
நின்று கூவினும் இன்றது காண்கிலேன்;
உதைத்துதைத் தாடும் உருள்பந் தொன்றும்
புதைபொருள் போல மறைந்துள தின்றே!
ஈங்கிவன் நானே எழுபந் தானேன்
ஓங்கி உலகெனை உதைத்துதைத் தாடும்;
கவட்டை வில்லுங் கவணும் மறந்தேன்!
அவற்றை யெல்லாம் அவலம் என்மேல்
திருப்பி விடுக்கும்! துரத்தி யடிக்கும்!
அன்றுயர் வானில் அமைதியும் நீலமும்
நின்றிடல் கண்டேன்; இன்றவை உளவோ?
மண்ணில் வளர்ந்த மரங்களும் அவற்றில்
வண்ணங் காட்டும் வளரிளந் தளிரும்
கண்ணின் விருந்தாய்க் களிப்பினை நல்கும்;
நினைப்பின் அவையெலாம் நிலைத்தவோ இன்று?
மனத்தால் விழைந்தவை அனைத்தும் மாறின!
அவையோ மாறின? அல்ல அல்ல;
தவிரா மாறுதல் சார்ந்ததென் பாலே!
இனியநல் லமைதி எய்துமோ இனிமேல்
தனியவ் வின்பந் தளிர்க்குமோ மனத்தே?

---

**பாடற் குறிப்பு:–** ஊட் (பிஷீஷீமீ) என்பவர் இயற்றிய பாடலின் தழுவல்.

## 41. புகையும் மனத்தன்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

[1]அகவை எனக்கோர் இருபத் தைந்தில்
பகரரும் விருப்பால் பழகினேன் நின்பால்;
மணிவிழாக் கடந்தது மற்றதன் பின்னும்
[2]பிணிவிடா திருந்து பேணினேன் நின்னை;
அல்லும் பகலும் அகலா திருந்து
புல்லிப் பயின்று பொழுதெலாம் போற்றினேன்;
தீயன் என்றுனைச் செப்பின ராகினும்
நீயென் தோழன் எனநான் நினைந்தேன்;
துணைவி நல்லாள்நின் தொடர்பை விடுகெனப்
பணிவுடன் பலநாள் பகர்ந்தனள் எனினும்
பிரிந்தே னல்லேன் பித்துடன் நின்னோடு
திரிந்தேன் மகிழ்ந்தேன் தெரிசுவை அனைத்தும்;
கவலைகள் என்னைக் கவ்வும் பொழுதெலாம்
உவகை [3]பெறுவான் உன்னை நயந்து
கற்பனைக் காவுள் கைத்தலம் பற்றிப்
பொற்புடன் உலவுவேன் புதுப்புதுக் கவிதைகள்
எத்தனை எத்தனை இயம்பினை! இனியாய்!
நலம்பல நல்குவை யாகினும் நண்பா
பொலிந்த தோற்றமும் புகைந்த மனமும்
அடைந்துளை யாதலின் அறியா வண்ணம்
தொடர்ந்து பற்பல தொல்லைகள் தந்தனை
நட்பிடைக் [4]குய்யம் நயந்தனை; நீதான்
கொன்றன்ன இன்னா செயினும் நீசெய்
ஒன்றுநன் றுள்ளினேன் ஆதலின் உன்னை
விட்டு விலகேன் வெண்புகைச் சுருட்டே!

---

**பாடற் குறிப்பு:–** 21.10.1984 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**

1. அகவை – வயது. 2. பிணிவிடா – தொடுப்பு.
3.பெறுவான் – பெறும்பொருட்டு. 4.குய்யம் – வஞ்சனை.

## 42. உயிர்ப்பொம்மை

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

பத்துத் திங்கள் பரிவுடன் வயிற்றில்
வைத்துக் காத்து வளர்த்ததோர் பூஞ்செடி;
மனத்தில் ஊறிய மாசறு நினைவுகள்
அனைத்தும் சேர்தரத் தளிர்த்த பசுந்தளிர்;
இருவர் அன்பும் இணைந்து பிணைந்து
மருவிய நாளில் மலர்ந்ததோர் அரும்பாம்;
இருவிழி குளிர ஈன்றோர் மகிழக்
குறுகுறு நடைபயில் கோலச் சிறுதேர்;
பொருளொடு புணராப் புதுவகை மொழியைச்
சிறுமலர் வாயால் சிந்திடும் பைங்கிளி;
சுருள்படு சிறுமுடி, மருள்நிறை கருவிழி,
எழில்தவழ் செவ்விதழ், இணையிலாக் குறுநடை,
தளிர்நிகர் சிறுவிரல், தங்கத் திருநிறம்,
குளிர்மொழி அனைத்தும் கொளும்உயிர்ப் பொம்மை;
அம்மக வுயிரை அருந்திய நோயினை
அம்மையென் றறைகுவர்; அடுக்குமோ அப்பெயர்?
எங்கே அவ்வெழில்? எங்கே அவ்வுயிர்?

எங்கே எங்கே என்றுநான் கதறினேன்;
பெற்ற வயிற்றில் பற்றிய தீயை
மற்றவர் எவ்வணம் மாற்றுவர்? எனினும்
என்விழி நீரை எடுத்தெடுத் தூற்றினேன்
நின்னழல் தணிந்து நிமிர்ந்தெழு தாயே!

---

**பாடற் குறிப்பு:–** குழந்தையைப் பிரிந்த தாய்க்குக் கூறிய ஆறுதல்–25.9.1975.

## 43. நெஞ்சிற் புகுந்த வேல்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

அறிவும் பண்பும் அமைதியோ டெழிலும்
செறிதரு திருமுகம் மருவிய குழலி!
முகமல ரிதழில் தவழ்தரு மூரலில்
தொகைநூ லினிமை தோன்றுதல் கண்டேன்;
உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உரைக்கும்
கள்ளம் அறியாக் கயல்விழி கண்டேன்;
ஆறாம் வகுப்பே தேர்நீ, ஒருபிழை
நேரா தெழுதும் நேர்த்தி கண்டேன்;
பிள்ளைமை நிலையிலும் பெரியவள் போல்நீ
என்னை ஓம்பிய இயல்புங் கண்டேன்;
பெதும்மை நின்னை வியந்து புகழ்ந்தேன்
ததும்பும் இனிமைத் தமிழை நின்வாய்
மழலை வடிவில் தருமென மகிழ்ந்தேன்;
அழகோ வியமே! இம்மகிழ் வெங்கே?
பூசாச் செம்மை பொருந்திய நின்னிதழ்
பேசா தெனலும் பேதுற் றயர்ந்தேன்;
ஆண்டவன் படைப்பென அன்னை நவின்றனள்
ஈண்டவன் யாண்டுளன்? எனயான் வெகுண்டு
கொடியன் அவனைக் கொல்லுவன் பாய்ந்தெனத்
தொடுவேல் எடுத்துத் துணிந்து நடந்தேன்;
எங்கோ மறைந்தனன்! எடுத்தஅவ் வேலைப்
பொங்குமென் னெஞ்சிற் புகுத்திக் கொண்டேன்;
நின்நா மொழிபுகல் நாள்வரின் நெஞ்சிற்
பாய்வே லதனைப் பறித்தெறி வேனே!

---

**பாடற் குறிப்பு:–** புதுச்சேரி கவிதைச் செல்வர் கல்லாடன் மகள் திருக்குழலி பேசாமையறிந்து மனம் நொந்து பாடியது – 4.5.1987.

## 44. முகக் கண்ணாடி

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

காட்டிக் கொடுத்துவிடும் கண்ணாடி – முகம்
காட்டிக் கொடுத்துவிடும் கண்ணாடி
கருத்திலிருப்பதை மறைத்து வைக்காமல்

(காட்டிக்)

போட்டிருக்கும் வேடமதை
மூடி வைத்தாலும்
பொய் சொல்லும் வாய் தனைப்
பூட்டி வைத்தாலும்

(காட்டிக்)

அயிரை மீனு பதுங்குது
அங்கே குறவை ஒதுங்குது
அந்த மீனும் இந்த மீனும்
அகப்படத்தான் போகுது!

கயிறு மேலே மிதக்குது
மிதப்பும் அங்கே கிடக்குது
கவ்விக் கவ்வித் தூண்டி முள்ளைக்

கெண்டை மீனு இழுக்குது!

(காட்டிக்)

---

**பாடற் குறிப்பு:**—1962இல் வெளிவந்த 'கண்ணாடி மாளிகை' திரைப்படப் பாடல்.

## 45. வாழ்க தமிழரசு

**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

கற்றறி புலவர் நாவில்
 களிநடம் புரியும் பாட்டால்
நற்றமிழ் மணக்கும் பூங்கா;
 நயமிகு போட்டி யிட்டு
வெற்றியில் மிளிரும் நல்ல
 [1] வெண்டளை மலருங் காடு;
தற்கிணை தானே யான
 தமிழர சென்னும் ஏடு. 1

வயல்களிற் புரட்சி செய்து
 வளமைகள் சேர்க்க வேண்டிச்
செயல்முறை யனைத்துங் காட்டிச்
 சீர்செயும் உழவர் தோழன்;
பயனுறு தொழில்கள் ஓங்கப்
 பயிற்றிடும் பள்ளி யாசான்;
அயலவர் கண்டு சொன்ன
 அறிவியற் கலைசேர் கோவில். 2

பழந்தமிழ்ப் பண்பா டெல்லாம்
 பாரினில் மீண்டுந் தோன்ற
உழந்துழந் தோடித் தேடி
 ஒவ்வொன்றுங் கண்டு வந்து
வழங்கிடும் வள்ளல்; வல்லார்
 வரைந்திடும் ஓவி யங்கள்
தழைந்திடும் ஓவக் கூடம்
 தமிழர சென்னும் ஏடு. 3

நெஞ்சினில் தமிழை வைத்தார்
 நெடுந்தொலை நாடு சென்று
விஞ்சையின் மேன்மை கண்டு
 விளக்கிடும் பயண நூலாம்;
எஞ்சலில் திறமை கொண்டார்
 எழுதிடுங் கதையின் பேழை;
செஞ்சொலைச் சிதைக்கா வண்ணம்
 செந்தமிழ் எழுதும் ஏடு. 4

கலைகளில் தோய்ந்த உள்ளம்
 காத்தலால் இந்த ஏடு
பலவகைச் சிறப்பும் மேவிப்
 பயன்தரக் காணு கின்றோம்;
உலகினில் அரசின் சார்பில்
 உலவிடும் இதழ்கட் கெல்லாம்
தலையென உலகம் போற்றத்
 தமிழர சென்றும் வாழ்க. 5

---

**பாடற் குறிப்பு:**— 'தமிழரசு' ஐந்தாம் ஆண்டு மலருக்காக எழுதப்பட்டது – 3.6.1974.
**அருஞ்சொற் பொருள்:— 1.** வெண்டளை – வெண்பா.

## 46. வாழிய தமிழரசு

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

இந்நாட்டு வரலாற்றை நோக்குங் காலை
இருந்தவரும் புகுந்தவரும் ஆண்ட நாளில்
பொன்காட்டிப் பொருள்காட்டிப் புகழுங் காட்டிப்
பொருதவர்தம் புறங்காட்ட மறமுங் காட்டித்
தந்நாட்டை வளமுறுத்த வழிகள் காட்டித்
தனியாட்சி நடத்திவந்தார் மன்னர் என்று
பொன்னேட்டில் பொறித்துளதைக் கண்டோம் அன்று
புதியதொரு வரலாற்றைக் கண்டோம் இன்று. 1

அன்றிருந்த மன்னரெலாம் செங்கோல் ஏந்தி
ஆண்டிருந்த அந்நாளில் மன்ப தைக்கு
நன்றுணர்ந்து செய்தபெரும் நன்மை யெல்லாம்
நாலைந்தும் ஆறேழும் என்ற எண்ணுள்
நின்றிருக்கும்; அதன்மேலும் ஒன்றி ரண்டு
நிகழ்ந்தாலும் நிகழ்ந்திருக்கும்; பகையும் போற்ற
இன்றிருக்கும் அரசுசெயும் நன்மை மட்டும்
எண்ணுக்குள் அடங்காமல் நீண்டி ருக்கும். 2

பணிபுரியும் அலுவலர்கள் இயற்கை எய்தின்
படுதுயரில் அவர்குடும்பம் வீழா வண்ணம்
அணுகியதன் தலைவிதியை அழித்துக் காக்க
அரியதொரு விதியெழுதும் அரசு கண்டோம்;
மணிவிழியின் ஒளிமயங்கிக் கலங்கி நொந்து
மாற்றரிய வழியின்றித் தவித்து நிற்போர்
அணியணியாய் வந்துவிழி பெற்றுச் செல்ல
அவர்தமக்கு வழிகாட்டும் அரசு கண்டோம். 3

தலையிலொரு முழத்துணியைச் சுற்றிக் கட்டித்
தனதிடையில் சிறுகந்தல் இறுகச் சுற்றி
உலையிலெழுங் காற்றெனவே மூச்சு வாங்க
உடல்பருத்த மாந்தரையும் ஏற்றி வைத்துத்
தலையிருந்து கால்வரையும் வியர்வை சிந்தி
தனிமனிதன் வண்டியினை இழுத்துச் செல்லும்
நிலையினியும் ஏனென்றால், படைப்போன் இந்த
நிலைஎழுதி விட்டானென் றுரைக்கக் கேட்டோம். 4

விதியென்று சொல்வதெலாம் சோம்பி நிற்பார்
வீண்பேச்சு; படைத்தவற்குப் பழியும் ஆகும்;
மதிகொண்டு சிந்தித்துத் துயரம் தீர்க்க
மாற்றொன்று காண்பதுதான் ஆள்வோர் செய்கை;
அதுவின்றேல் அரிய ணைஏன்? தாழ்வு பெற்ற
அவர்தமக்குங் கைகொடுப்போம் என்று ணர்ந்து
மிதிவண்டி நல்கிஅவர் துயர்கு றைத்து
மீட்சிதரத் துணைநிற்கும் அரசு கண்டோம். 5

அங்கமெலாங் குறைந்தழுகி முகம்வ தங்கி
அழகழிந்து புறங்கூனி நடைத ளர்ந்து
தங்கஒரு நிலையின்றித் தண்டு மின்றிப்
தள்ளாடிச் சோற்றுக்கு வழியு மின்றிப்
பொங்கிவரும் வேதனையை அழுது தீர்த்துப்
புழுவினுங்கீழ் நிலையினராய் இரந்து வாழும்
தொங்குமுடற் றொழுநோயர் வாழ்வை எண்ணத்
தொடங்கியவர் எவருள்ளார் காந்தி யன்றி? 6

புதுவாழ்வு தரவந்த காந்தி யண்ணல்
போற்றியநற் கொள்கைகளை நெஞ்சிற் கொண்டு,
விதிதானே தொழுநோயர் துயருக் கெல்லாம்
விதைஎன்ற சொல்மாற்றி வாழ்வு தந்து,
மதிவாழும் துணிவோடு கருணை வாழும்
மனங்கொண்ட அருட்செல்வர் ஆளும் ஆட்சி
இதுபோல வேறுண்டா? யாண்டும் இல்லை;
என்றென்றும் இவ்வரசு வாழ்க என்போம். 7

பூவின்றிப் பொட்டின்றிக் கழுத்தில் கையில்
பூணுகின்ற அணியின்றிச் சுவைகள் உண்ண
நாவின்றி எதிரில்வரத் தகுதி யின்றி
நலமெல்லாம் பெறலின்றி நெஞ்சுள் நாளும்
கோவென்று கூவிஎழிற் கோதை மார்கள்
கொழுநர்தமை இழந்தமையால் வாழ்வு கெட்டுச்
சாவென்று வருமென்று நொந்து நொந்து
சலித்திருந்து நடைப்பிணமாய்க் கிடந்து ழன்றார். 8

உற்றாரும் பெற்றாரும் கைம்மை யுற்ற
உயிர்ச்சிலையைக் கண்டுமனம் உருகி நிற்பர்;
'மற்றாரும் விலக்கரிய தலையெ ழுத்து
மாதிவட்கு வாய்த்தவிதம் கொடுமை' என்பர்;
கற்றாரும் மற்றாரும் விதியை நம்பிக்
காலத்தைக் கடத்தினரே யன்றி யந்தப்
பொற்பாவை வாழ்வுக்கு வழியைக் காணப்
புரியாமல் மதிமயங்கி வாழ்ந்து வந்தார். 9

வேரடியிற் பழுத்தபலா கேட்பா ரற்று
வீணாதல் கண்டெழுந்து, மூடக் கொள்கை
வேரடியைப் பெயர்த்துவிட்டார் பெரியார்; அந்த
வீரத்தின் அடிச்சுவட்டில் நடந்து செல்லும்
சீருடைய நமதரசு துணிந்து, கண்ணீர்ச்
சிற்பங்கள் சிரித்திருக்க, வயது சென்றோர்
யாருடைய துணையுமின்றி வாழ்ந்தி ருக்க
ஈடில்லா மறுமலர்ச்சி வழங்கக் கண்டோம். 10

'வறியவர்தம் புன்னகையில் இறைவன் உள்ளான்
வாழவழி ஏழையர்க்குக் காண்போம்' என்ற
அறிஞரவர் அண்ணாவின் இதயப் பாங்கை
அப்படியே நமதரசு பெற்ற தாலே
சிறியஇளங் குஞ்சுகளைப் பெற்றோ ரின்றிச்
சீரிழந்த குழந்தைகளைப் பேணிக் காக்கச்
செறிவுடைய நெறியமைத்து வாழ்நாள் எல்லாம்
சிரித்திருக்க அமைந்ததுகாண் கருணை இல்லம். 11

இலைநமக்கு வழிஏதும் என்று வாடி,
எல்லாமே தலையெழுத்தென் றுரைத்து, வாழ்வின்
நிலையிழந்து கீழ்த்தளத்தில் உழல்வோர் எல்லாம்
நிமிர்ந்தெழுந்து நடந்துலகை விழித்து நோக்கும்
கலையிதனைக் கலைஞரலால் எவரே செய்வர்?
கடுகளவும் நன்றியுளார் ஒப்புக் கொள்வர்;
தலையெழுத்தை அழித்தெழுதுங் கையெ ழுத்தைத்
தமிழரசைப் பல்லாண்டு வாழ்க என்போம். 12

---

**பாடற் குறிப்பு:–** தமிழ் நாட்டரசின் செய்தி இதழான 'தமிழரசு' மலரில் வெளிவந்த பாடல்.

## 47. உதவுவையே
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

கட்டளைக் கலித்துறை

பெற்றார் உயிரென நட்டார் பெரியர் சிறியரெலாம்
கற்றா னிலை,சீ எனஎற் கடிந்தே இகழ்ந்துரைக்கச்
சற்றா கினுமதைத் தாளேன் சிறையில்நக் கீரனுக்கா
உற்றாய் தமிழினைப் பெற்றாய் கலைஎற் குதவுவையே

---

**பாடற் குறிப்பு:–** மாணவப் பருவத்தில் பாடியது.

## 48. நல்குன் அருள்

**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

நீல மணிநிறத்தாய் நின்மலன்றன் பாகத்தாய்
கோல வுருவுடையாய் கொண்டல்மீன் – போல
விழியுடையாய் என்றன் விழுமங்கள் யாவும்
அழிவுறவே நல்குன் அருள்

---

**பாடற் குறிப்பு:—** சன்மார்க்க சபையில் பிரவேச பண்டித வகுப்பிற் பயிலுங்கால், மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வில், மீனாட்சியம்மன் மீது ஒரு நேரிசை வெண்பாவைக் குறித்த நேரத்திற்குள் பாடப் பணித்த பொழுது பாடியது.